Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 11, 2021

திங்கட்கிழமை, 11 ஒக்டோபர் 2021 | ஒளி: 07 கதிர்: 123 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 35 மரணங்கள் பதிவு

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி நேற்று முன்தினம் (09) மேலும் 35 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

18 ஆண்களும் 17 பெண்களும் உயிரிழந்துள்ளனர். 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 30 பேரும் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டோரில் 04 பேரும் 30 வயதுக்கு உட்பட்டோரில் ஒருவரும் மரணித்துள்ளனர். அவர்களுடன் சேர்த்து கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 13,331 ஆக அதிகரித்துள்ளது.

அரசியலமைப்பு, தேர்தல் முறை

# புதியன வரும்

### இராணுவத்தின் 72ஆவது வருட நிறைவில் ஜனாதிபதி திட்டவட்டம்

**“ஊழல், மோசடிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அதற்காக, அனைத்து அதிகாரிகளும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்”**

பயங்கரவாதமோ, மதத் தீவிரவாதச் செயற்பாடுகளோ ஏற்படாத வகையில் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, படையினர் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர் எனத் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மக்களுக்கு உறுதியளித்தவாறு, புதிய அரசியலமைப்பு, புதிய தேர்தல் முறைமையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

“சாக்கு போக்கு சொல்லப்போவதில்லை. ஒரே சட்டம்; ஒரே நாட்டுக்குள், மோசடிகள் அற்று சரியான முறையில் முன்னோக்கிச் செல்ல ஒத்துழைப்பு வழங்குங்கள்” என்றும் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக, இந்நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள், பொதுமக்களுக்காகப் பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன என்றார். தொடர்ச்சி P2



# இலங்கை ஜம்இய்யதுல் உலமா அச்சம்

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதியன்று இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பைப் போன்று இலங்கையும் மற்றொரு பயங்கரவாத தாக்குதலை எதிர்கொள்ள நேரிடும் என்று ஊடகங்கள் எச்சரித்ததால் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அச்சமடைந்துள்ளது.

முஸ்லிம் சமுதாயத்தை பிரார்த்தனை செய்யவும், அனைத்து வகையான துயரங்கள், பேரழிவுகளில் இருந்தும் இலங்கையையும் அதன் அனைத்து மக்களையும் பாதுகாப்பதற்காக தொடர்ச்சி P2



**“எனது சட்ட மூலத்தில் தேர்தலை நடத்தலாம்”**

முழுச் செய்தி P4

# இலங்கை மல்யுத்த அணி நோர்வேயில் மாயமானது

### அணியின் முகாமையாளர் இந்திரவன்ஸ, மீண்டும் இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்க நடவடிக்கை

டி.கே.ஜி.கபில

உலகில் பல நாடுகள் பங்கேற்கும் மல்யுத்த விளையாட்டுப் போட்டிக்கு இலங்கையை பிரதிநிதித்துப்படுத்தி சென்றிருந்த விளையாட்டு வீரர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட 44 பேர், அந்தப் போட்டியை கைவிட்டு, குழுவாகத் தப்பிச் சென்றுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தத் தகவலை இலங்கை மல்யுத்த சம்மேளனத்தின் தலைவர் சரத் ஹேவாவிதாரண உறுதிப்படுத்தினார். தொடர்ச்சி P2





# தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க ஒத்துழைப்போம்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

ஒன்றிணைந்த தொழிற் சங்கங்கள் முன் வைத்துள்ள நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு கட்சி மட்டத்தில் கலந்துரையாடி பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதாகவும், அவற்றிற்கு ஒத்துழைப்பதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார். தொடர்ச்சி P2



ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடு:


# பிரதமருடன் இன்று பேச்சு

ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஆசிரியர், அதிபர் சங்கங்களுக்கிடையே கலந்துரையாடல் இன்று (11) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் பங்கேற்குமாறு ஒவ்வொரு தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் அறிவிக்கப்பட்டு உள்ளதாக கல்வியமை தொடர்ச்சி P2

# டிசெம்பரில் மற்றுமோர் அலை?

டிசெம்பர் மாதமளவில் மற்றுமோர் அலை உருவாகும் அபாயம் உள்ளதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் கமல் பெரேரா எச்சரித்துள்ளார்.

கொரோனா தொற்று முடிவுக்கு வந்து விட்டதென நினைத்துச் செயற்பட்டால், இந்நிலை ஏற்படுமெனவும் அவர் எச்சரித்துள்ளார். தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு, நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில், கொரோனா தொற்றை மறந்து மக்கள் செயற்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.



# ஆபத்து இன்னும் நீங்கவில்லை

நோய்த்தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதன் மூலம் ஆபத்து நீங்கவில்லை. எந்த நேரத்திலும் வைரஸ் உருமாறக்கூடும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன எச்சரித்துள்ளார்.

கொரோனா ஆபத்து நீங்கிவிட்டதாக யாரும் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம் எனத் தெரிவித்த அவர், மாறாக இப்போதைக்கு, தொற்று மற்றும் இறப்புகள் குறைந்து வரும் போக்கைக் காட்டுகிறது என்றார். தொடர்ச்சி P2

புத்தர் சிலை உடைப்பு வழக்கு விசாரணை ஆரம்பம்:

# 16 சந்தேகநபர்களின் விரல் அடையாளத்தைப் பெற உத்தரவு

மாவனெல்ல நகரம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் புத்தர் சிலைகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, கேகாலை மாகாண மேல் நீதிமன்றத்தில் இம்மாதம் 8ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிபதி ஜகத் ஏ கஹந்தகமகே (தலைவர்) தலைமையில் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையிலேயே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஜயகீ டி. அல்விஸ், இந்திக காலிங்கவங்ச ஆகியோர் ஏனைய நீதிபதிகளாவர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 16 பேரில், 14 பேர் மட்டுமே அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். தொடர்ச்சி P2

# தவறான நிலைப்பாட்டில் அபிவிருத்தி பயணிக்காது




தவறான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு, நாட்டின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாது எனத் தெரிவித்த கிராமிய வீதி உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, சுதந்திரத்துக்கு தொடர்ச்சி P2

# 20 ஐ இரத்துச் செய்துவிட்டு 19 இன் கீழ் நிர்வகிக்கவும்

தன்னுடைய அரசியல் அனுபவங்கள் மட்டுப்படுத்தப்பட்டதென ஜனாதிபதி புரிந்து கொண்டதால், அனுபவம் உள்ள ஏனைய அமைச்சர்களுடன் இணைந்து, நாட்டை முன்கொண்டு செல்ல, பிரதமரின் உதவியை ஜனாதிபதி நாடியுள்ளார் எனத் தெரிவித்துள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது நல்ல அறிவிப்பு என்றார்.

அத்துடன், 20ஆவது திருத்தம் தோல்வி என்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அந்த அரசியலமைப்பு திருத்தத்தால் அமைச்சரவை ஆட்சி உருவாகியது. தொடர்ச்சி P2



# இன்று வரும் அரிசி 100 ரூபாய்



வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியில் ஒரு தொகை, கொழும்பு துறைமுகத்தை இன்று (11) வந்தடையவுள்ளது.

இவ்வாறு கொண்டுவரப்படும் அரிசி தொகையில், ஒரு கிலோகிராம் அரிசியை 100 ரூபாவிற்கும் குறைவான விலையில் வழங்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். தொடர்ச்சி P2

# ஆயராக நியமனம்



சிலாபம் ஆயர் வெலென்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, கண்டி மறை மாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பரிசுத்த பாப்பரசரால் இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது. இதைத் தவிர, சிலாபம் ஆயராகவும் வலன்ஸ் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என்று இலங்கையிலுள்ள வத்திகான் தூதுவர் அறிவித்துள்ளார். இவ்விடயத்தை, இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் தேசிய ஆணைக்குழுவின் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான லால் புஷ்பதேவ பெர்னாண்டோ உறுதிப்படுத்தியுள்ளார். தொடர்ச்சி P2

# பொய் கூறியதாக மகளின் வாயில் சூடுவைத்த தாய்

பொய் சொல்லிவிட்டார் எனக்கூறி, தன்னுடைய ஐந்து வயதான மகளின் வாயில் சூடுவைத்து, கொடுமைப்படுத்திய தாய் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

# 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர்



14.5 மில்லியன் ஃபைசர் தடுப்பூசிகளைக்கொண்டு வருவது தொடர்பில், ஃபைசர் உற்பத்தி நிறுவனத்துடன், மருந்துகள் ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவானது விசேட இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்துள்ளதுடன், இதற்கமைய, இவை 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசியாக செலுத்தப்படவுள்ளது என மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். தொடர்ச்சி P2

# ஏர் பூட்டி வயல் உழுத சுமந்திரன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், விவசாயம் செய்யும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளையில் உள்ள தனது வயலில், நேற்றுக்காலை ஏர் பூட்டி வயல் உழுதுள்ளார்.



LK Newspapers www.lknewspapers.com

PAGE 1 தொடர்ச்சிகள்

# புதியன வரும்

இலங்கை இராணுவத்தின் 72ஆவது வருட நிறைவு நாளான நேற்று (10) அநுராதபுரம், சாலியபுர கஜபா ரெஜிமென்ட் தலைமையகத்தில் இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உலகிலுள்ள இராணுவத்தினர் யுத்தத்துக்கு மாத்திரமன்றி, தேசத்தைக் கட்டியெழுப்பவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

எமது நாட்டின் முப்படையினர், தனிமைப்படுத்தல் மற்றும் தடுப்பூசி ஏற்றல் போன்ற சுகாதாரத் தரப்பினரின் பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி, கொவிட் ஒழிப்புக்காகச் செயற்பட்டு வருகின்றனர். அதற்காக வழங்கிய அர்ப்பணிப்புடன் கூடிய சேவைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

"முப்படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் மன உறுதியை அதிகரிக்கச் செய்து, அவர்களுக்கான உத்தியோகபூர்வ அதிகாரங்களை முறையாக வழங்கி, தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க, கடந்த இரண்டு வருடக் காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாட்டுக்குள் பயங்கரவாதமோ அல்லது மதத் தீவிரவாதச் செயற்பாடுகளோ மீண்டும் ஏற்படாத வகையில் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர்" என்றார்.

ஊழல், மோசடிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அதற்காக, அனைத்து அதிகாரிகளும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டுமென்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

# ஆபத்து இன்னும் நீங்கவில்லை

மக்கள் இப்போது மத வழிபாட்டுத் தலங்கள், திருமணங்கள், இறுதிச் சடங்குகளுக்கு ஒன்றுகூடுகிறார்கள். இது ஒரு மோசமான முன்னுதாரணம் என்றும், அவர் தெரிவித்தார்.

# இலங்கை மல்யுத்த...

நோர்வே ஒஸ்லோ நகரில் ஒக்டோபர் 2ஆம் திகதியன்று ஆரம்பமான இந்தப் போட்டிகள், நேற்று (10) நிறைவடைந்தன. இதில், 72 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றுள்ளனர்.

அவ்வாறு குழுவாக தப்பியோடியவர்களில் சிலர் நாட்டுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் சிலரே இன்னும் திரும்பவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அந்த அணியின் முகாமையாளர் குடாதந்திரிகே டொனால்ட் இந்திரவன்ஸ, மீண்டும் இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை மல்யுத்த வீரர்கள் சம்மேளனத்தின் தற்போதைய தலைவர், சரத் ஹேவாவிதாரண தெரிவித்துள்ளார்.

# இன்று வரும் அரிசி 100 ரூபாய்

முதற்கட்டத்தின் கீழ், சதொச ஊடாக அரிசியை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பின்னர் கூட்டுறவு மற்றும் சிறப்பு அங்காடிகள் ஊடாக 100 ரூபாவுக்கும் குறைவான விலையில் அரிசியை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# 20 வயதுக்கு மேற்பட்ட...

இந்த பூஸ்டர் தடுப்பூசி நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், சுகாதார அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் என்ற முன்னுரிமையில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் காலங்களில் செலுத்தப்படும் என்றார்.

இலங்கைக்கு இதுவரை 3,28,35,000 கொரோனா தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் , 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 100 சதவீதம் சனத்தொகையினர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளதுடன், 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுள் மூன்றில் இரண்டு சதவீதத்தினர் தடுப்பூசியை பெற்றுள்ளனர் என்றார்.

அத்துடன், எதிர்வரும் இரண்டு வாரங்களில் உயர்தர மாணவர்கள் அனைவருக்கும் ஃபைசர் தடுப்பூசி செலுத்துவதற்காக, மாவட்ட ரீதியில் பணியாற்றும் கொரோனா விசேட வைத்தியர்கள், சுகாதார வைத்திய பணப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றார். தற்போது தம்வசம் மாணவர்களுக்கு செலுத்துவதற்காக ஓரளவு ஃபைசர் தடுப்பூசி உள்ளது என்றாலும், எதிர்வரும் 3 வாரங்களில் 10 இலட்சம் ஃபைசர் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளதுடன் நவம்பர் மாதம் மேலதிகமாக 17 இலட்சம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன என்றார்.

சினோபாஃம் தடுப்பூசி செலுத்திக்கொண்டால் அமெரிக்காவுக்கு செல்லமுடியாதென தெரிவித்து பலர் சினோபாஃம் ஏற்றிக்கொள்ளவில்லை என தெரிவித்த அவர், உலக சுகாதார ஸ்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு கொரோனா தடுப்பூசியை செலுத்திக்கொண்டவர்களும் அமெரிக்காவுக்குள் வர அனுமதி உண்டு என, அமெரிக்க சுகாதார தரப்பினர் அறிவித்தல் ஒன்றை நேற்று முன்தினம் விடுத்துள்ளனர் என்றார்.

எனவே, இதுவரை தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாதவர்கள், விரைவாக தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

# ஆயராக நியமனம்

கண்டி ஆயர் ஜோசப் வியன்னி பெர்னாண்டோ ஓய்வு பெற்றதைத் தொடர்ந்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# பிரதமருடன் இன்று பேச்சு

செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலானது சாதகமான முடிவுகளைத் தரும் என எதிர்பார்ப்பதாக பெரேரா மேலும் கூறியுள்ளார்.

அதனைத் தவிர, பாடசாலைகள் மீளத் திறக்கும்போது ஆசிரியர்கள் பாடசாலைக்குத் திரும்புவர் என ஆழமான நம்பிக்கை ஒன்று காணப்படுவதாகவும் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பிரதமர் ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலின்போது ஆசிரியர், அதிபர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வொன்று வழங்கப்படுமெனத் தான் எதிர்பார்ப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அடுத்தாண்டு பட்ஜெட் மூலம் தீர்வொன்று முன்வைக்கப்படுமென்ற அரசாங்கத்தின் கூற்றுகள் நிலைமையை மோசமாக்கியுள்ளதாக ஸ்டாலின் மேலும் கூறியுள்ளார்.

# 16 சந்தேகநபர்களின் விரல் அடையாளத்தை பெற உத்தரவு

ஏனைய சந்தேநபர்கள் இருவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

வழக்கு விசாரணைக்குப் பின்னர், அனைவரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

2018 டிசெம்பர் 23 மற்றும் 26ஆம் திகதிக்கு இடைப்பட்ட நாள்களில் மாவனெல்ல நகரம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் புத்தர் சிலைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டன. இதுதொடர்பில் மாவனெல்ல, கம்பளை மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களில் வைத்து பலரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

மாவனெல்ல நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட மேற்படி வழக்கு, கேகாலை மாகாண மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. இந்நிலையிலேயே இவ்வழக்கு கடந்த 8ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்களின் விரல் அடையாளத்தை பெற்றுக்கொள்வதற்கு உத்தரவிட்ட நீதிபதிகள் குழாம் வழக்கு விசாரணையை நவம்பர் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

# பொய் கூறியதாக...

கிளிநொச்சி, அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடியிருப்பு பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாயை சுற்றியும் தொடைப்பகுதியிலும் கடுமையான சூட்டுக்காயங்களுக்கு உள்ளான அச்சிறுமி, அக்கராயன்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிள்ளையின் தந்தை தொழிலுக்காகச் சென்றுள்ளார். இந்நிலையில் திடீரென கோபமடைந்த அத்தாய், கையிலிருந்த பீங்கானை சூடாக்கி, ஐந்து வயதான மகளின் வாயைச் சுற்றியும் தொடைகளிலும் இவ்வாறு சூடு வைத்துள்ளார். இது தொடர்பில் பிரதேசவாசிகள் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். அதனையடுத்தே சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு பொலிஸாரால் அச்சிறுமி மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த பொலிஸார், தாயை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# 20 ஐ இரத்துச் செய்துவிட்டு 19 இன் கீழ் நிர்வகிக்கவும்

அதனால்தான் பிரதமரின் உதவியை ஜனாதிபதி கோரியுள்ளார்.

கொரோனா மற்றும் பொருளாதாரத்தில் அரசாங்கத்துக்குள் மற்றுமோர் அரசாங்கம் இருந்தது. அதேபோல் அரிசி விலைக்காகவும் அரசாங்கத்துக்கு வெளியே மற்றுமோர் அரசாங்கம் இருந்தது. இதன் பலன் என்ன, வீட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்து, வீட்டின் எதிர்பார்ப்பு சிதைவடைந்துள்ளது. இந்த முறையின் பலன் கிடைக்கவில்லை.

எனவே, ஜனாதிபதியின் அறிவிப்புக்கு அமைய சம்பிரதாய அமைச்சரவை ஆட்சிக்கு செல்வது நல்லது. அதற்காக 20ஆவது திருத்தத்தை இரத்துச் செய்துவிட்டு, அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தை கொண்டு செல்லவும் என்றார்.

19ஆவது திருத்தின் கீழ் அரசாங்கத்தை கொண்டு செல்லவே ஜனாதிபதி நியமிக்கப்பட்டார். 19ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தை கொண்டு செல்லவே பாராளுமன்றமும் நியமிக்கப்பட்டது.

இந்த முறையை செயற்படுத்தினால் அமைச்சரவை பாராளுமன்றத்துக்கு பொறுப்பு கூற வேண்டும்.

விசேடமாக இந்தப் பாராளுமன்றமானது 20ஆவது திருத்தின் கீழேயே துண்டாடப்பட்டதால், எதிர்க்கட்சி மற்றும் ஏனையோரின் நம்பிக்கையும் இல்லாமல் போனது.

பாராளுமன்றமும் மக்கள் நம்பிக்கையை வெற்றி கொள்ள வேண்டும். இதனால் நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் எதிர்க்கட்சியுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். ஜி.எஸ்.பி பிளஸ், கொரோனா பிரச்சினை, சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வந்தால், பலமிக்க இலங்கையின் எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்றார்.

# இலங்கை ஜம்இய்யதுல் உலமா அச்சம்

எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் துஆ செய்யும்படியும் அறிவுறுத்தியுள்ளது.

ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ள அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா,

தாக்குதலின் கூற்றுகள் சரிபார்க்கப்படாததால் முஸ்லிம் சமூகம் மிகவும் எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்கவேண்டும் என்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இஸ்லாமியம் மற்றும் அனைத்து மதங்களுக்கும் விரோதமாக செயல்படுவதாக பரவலாக கருதப்படும் அதே வேளையில், இஸ்லாத்தின் பாதுகாவலர்களாக தங்களை தவறாக மற்றும் தவறாக பிரதிநிதித்துவப்படுத்தும் ஐஎஸ்ஐஎஸ் மற்றும் அது போன்ற பயங்கரவாத அமைப்புகளிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு சமூகத்தை நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம் என்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கேட்டுக்கொண்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய அறிஞர்கள் ஒருமனதாக இந்த அமைப்புகள் இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்கள் என்று கூறியுள்ளனர், அதன் கையாளுபவர்கள் இன்னும் முழுமையாக விசாரிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, அனைத்து முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளும் கூட்டாக 2015.07.23 அன்று ஒரு பிரகடனத்தை வெளியிட்டன என்பது தொடர்பிலும் எடுத்துரைத்துள்ளது.

21 ஏப்ரல் 2019 2019 ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதல்களில் அப்பாவி பொதுமக்கள் உயிர் இழந்தது மற்றும் பலர் காயமடைந்தனர் என்பதில் நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம்.

எங்கள் சமூகம் எண்ணற்ற பங்களிப்புகளையும் தியாகங்களையும் செய்துள்ளது என்பதை வலியுறுத்த வேண்டும். நம் நாட்டின் தேசிய நலன், வரலாறு முழுவதும் இந்த நாட்டின் இறையாண்மையையும் பாதுகாப்பையும் பாதுகாக்க நம் முன்னோர்கள் அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். இதேபோல், அவர்கள் நம் நாட்டோடு நன்மை பயக்கும் வெளிநாட்டு உறவுகளை வளர்ப்பதிலும் வலுப்படுத்துவதிலும் முன்னணியில் உள்ளனர் என்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராக சில தவறான வழிகளால் நடத்தப்பட்ட கோழைத்தனமான மற்றும் மிருகத்தனமான பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து, முஸ்லிம்களுக்கு எதிராக அவநம்பிக்கை மற்றும் வெறுப்புணர்வை தேசத்தின் மீது சமூகத்தின் விலைமதிப்பற்ற பங்களிப்பைப் புறக்கணித்து, கந்து வட்டி ஆர்வங்கள் தொடர்ந்து தூண்டுகின்றன என்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா குறிப்பிட்டுள்ளது.

# தவறான நிலைப்பாட்டில் அபிவிருத்தி பயணிக்காது

பின்னர் நாட்டை முன்னேற்றும் நோக்கத்துடன் அரச தலைவர்கள் நிலைபேறான அபிவிருத்தி யோசனைகளை முன்வைக்கும் போது, ஒரு தரப்பினர் எதிர்த்தார்கள். இன்றும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். நாட்டுக்கு நன்மை பயக்கும் திட்டங்களுக்கு அரசியல் நோக்கமில்லாமல் ஆதரவு வழங்க வேண்டும் என்றார்.

நீர்கொழும்பு பகுதியில் இடம்பெற்ற கட்சி தொகுதி அமைப்பாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் கட்சி பேதங்களைப் புறக்கணித்து, தேசிய கொள்ளை திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

தேசிய வளங்களின் உச்ச பயனைப் பெற முடியாவிட்டால் என்ன செய்வது? அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப மற்றும் மூலதன வசதி இல்லாவிட்டால் நாட்டின் பொதுச்சட்டத்துக்கு அமைய, வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைவது தவறேதுமில்லை.

கனிய வளத்தின் பயனை 20 வருட காலத்திற்கு பெற முடியாத நிலை காணப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கம் நாட்டுக்கு பயன்தரும் முதலீடுகளை நாட்டுக்கு கொண்டு வரவில்லை. அரசாங்கம் என்ற ரீதியில் நாட்டுக்கு பயன்தரும் முதலீடுகளை தற்போது கொண்டு வந்துள்ளோம்.

எமது நாட்டு முதலீட்டாளர்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்கிறார்கள்; தொழில் புரிகிறார்கள். ஆனால் வெளிநாட்டவர்கள் இங்கு முதலீடு செய்யக் கூடாது, தொழில் புரிய கூடாது என்று எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

அரச நிறுவனங்கள் பல நட்டத்தில் இயங்குகின்றன. இவற்றை நிர்வகிக்க 22 மில்லியன் நிதி செலவிடப்படுகிறது. மக்களின் வரிப்பணத்தை வீண்விரயம் செய்யாமல் நாட்டுக்கு அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கிறோம் என்றார்.

இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்படும் போது எதிர்ப்பு தெரிவிப்பது தவறானதாகும். தேசிய வளங்களை பாதுகாக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டு. கெரவலப்பிட்டிய மின்நிலையத்தின் பங்குகள் ஒப்பந்த அடிப்படையில் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதே தவிர விற்கப்படவில்லை என்பதை எதிர்தரப்பினர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே, குறுகிய அரசியல் நோக்கத்திற்காக மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்து, வெளிநாட்டு முதலீடுகளை இல்லாதொழிக்கும் முயற்சிகளை எதிர்க்கட்சி கைவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க ஒத்துழைப்போம்

துறைமுக, மின்சக்தி, பெற்றோலிய ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் முக்கிய பிரதிநிதிகள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் சந்தித்து, தங்களது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினர். இதன்போது கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், கட்சியின் தொழிற்சங்க இணைப்பாளர் மஹிலால் த சில்வா ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், ஒன்றிணைந்த பிரஸ்தாப தொழிற்சங்க முக்கியஸ்தர்களிடம் அவர்களின் கோரிக்கைகளையும் அவற்றிற்கான விளக்கங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

மின் சக்தி, துறைமுகம், பெற்றோலியம் போன்ற பொருளாதார ரீதியான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அரச நிறுவனங்களின் கூட்டு தொழிற் சங்க பிரதிநிதிகள் எங்களை வந்து சந்தித்து அண்மைக் காலமாக இந்த நிறுவனங்களின் சொத்துகளை பாராதீனப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்து வருகின்ற முயற்சிகள் சம்பந்தமாக தங்களுடைய பலத்த எதிர்ப்பை வெளியிட்டனர். கூட்டு தொழிற் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகி வருவதாகவும் கூறினர்.

இந்த விவகாரம் தொடர்பில் உரிய விளக்கங்களைத் தருவதற்காவே அவர்கள் எங்களை வந்து சந்தித்தனர்.

அவர்கள் எங்களிடம் கூறியதிலிருந்து, இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் தேர்தல் காலங்களில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை அப்பட்டமாக மீறி இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இது குறித்து பல விதமான காரணங்களைச் சொல்லி, தனியார் மயப்படுத்தல் ஊடாக பாவனையாளர்களுடைய செலவினங்களை பொருத்தமான முறையில் கட்டுப்படுத்த முடியும் என்ற ஒரு விசித்திரமான சித்தாந்தத்தையும் அவர்கள் முன்வைக்கின்றனர்.

அதேவேளை, உபாய ரீதியாக நாட்டில் சர்வதேச சக்திகளுக்கு இடையில் இருக்கின்ற முரண்பாடுகளுக்கு நடுநிலையான அடிப்படையில் நாங்கள் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற புரிதலையும் நாம் உள்வாங்க வேண்டும்

உலக வல்லரசுகளுக்கு மத்தியில் நடக்கின்ற போட்டா போட்டியில் நாங்கள் ஒரு சமநிலையில் இருந்து, எங்களுடைய பொருளாதாரத்தை வழிநடத்த வேண்டும். தனியார் மயப்படுத்தலுக்கான முயற்சிகளில் ஈடுபடும் போது குறைந்தபட்சம் வெளிப்படைத் தன்மை சரிவரப் பேணப்பட வேண்டும்.

## இந்திய இராணுவ பிரதானி நாளை இலங்கைக்கு விஜயம்



இந்திய இராணுவ பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே நாளை (12) இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் வேண்டுகோளுக்கு இணங்கவே, இந்திய இராணுவ பிரதானி இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கைக்கு வரும் இந்திய இராணுவ பிரதானி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை, இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவின் தலைமையில் இராணுவ தலைமையகத்தில் நாளை மறுதினம் (13) நடைபெறவுள்ள ஊடகவியலாளர் சந்திப்பிலும் இந்திய இராணுவ பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே கலந்துகொள்ளவுள்ளார்.

இந்திய படையினரின் பங்கேற்புடன் நடைபெற்று வரும் 'மித்ரா சக்தி' இராணுவ கூட்டுப் பயிற்சிகளின் இறுதிக்கட்ட நிகழ்வுகளையும் அவர் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேதன திரவ உரம்: உண்மையை இலங்கை விளங்கிக் கொள்ளுமா?



சீன நிறுவனத்திடமிருந்து, சேதன திரவ உரங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக, அறிவியல் மற்றும் உண்மைத் தன்மையை மதிக்குமாறு சீனா, இலங்கைக்கு தெரிவித்துள்ளது.

இரண்டாவது அமைப்பில் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, சீன நிறுவனத்திடமிருந்து சேதன திரவ உரத்தை இறக்குமதி செய்ய வேண்டாம் என்று முடிவு எடுக்கப்பட்டதாக விவசாய அமைச்சு அறிவித்திருந்தது.

தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது பக்டீரியா கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள சீன தூதரகம்,தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையால் எடுக்கப்பட்ட அவசர முடிவுக்கு அறிவியல் அடிப்படை இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.


National Plant Quarantine Service அறிக்கையின் அடிப்படையில், சீனாவின் சேதன திரவ உரத்தை நிராகரிக்க இலங்கை அதிகாரிகள் எடுத்த முடிவு கேள்விக்குரியது மட்டுமல்லாமல் நிறுவனத்துக்கு பெரும் நிதி இழப்பையும் ஏற்படுத்துகிறதென்று சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## நாவல் வெளியீட்டு நிகழ்வு



தமிழறிஞர் அல் அஸூமத் எழுதிய 'அமார்க்க வாசம்' எனும் நாவல் வெளியீட்டு நிகழ்வு புரவலரின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது, நாவலின் முதற்பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் எழுத்தாளர் முஸ்டீனையும் அருகில் காணலாம்.

## மிலிந்தவுக்கு அமைச்சரவை அந்தஸ்தா?



அமைச்சரவை அந்தஸ்தைக்கொண்ட எந்தவொரு நியமனங்களும் இதுவரையில் வழங்கப்படவில்லை என அமைச்சரவை அலுவலகம் தெரிவித்துள்ளது. அமைச்சரவை அந்தஸ்துள்ளவர்களை நியமிப்பதற்கு அரசியலமைப்பில் குறிப்பிட்ட விதிமுறைகள் இல்லை எனவும் அமைச்சரவை அலுவலகம் தெரிவித்துள்ளது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், எமது சகோதரப் பத்திரிகையான 'சண்டேடைம்ஸின்' கோரிக்கைக்குப் பதிலளித்துள்ள அமைச்சரவையின் தகவல் அதிகாரி டபிள்யூ.கே.வீரவர்தன, அமைச்சரவை அலுவலகத்தில் உள்ள தகவல்களுக்கு அமைய, எந்தவொரு அரசாங்க அதிகாரிகள், இராஜதந்திரிகளுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள நியமனங்கள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிப்பதற்கான சகல அதிகாரமும் ஜனாதிபதிக்கே உள்ளதாக அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமைக் குறிப்பிடத்தக்கது.

## மாப்பாண முதலியாருக்கு பிரதமர் இரங்கல்

குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் செயலாற்றல் அவரை அடியவனாக்கியது. அப்படிப்பட்ட மகோன்னத புருஷரின் இழப்பு, நம் அனைவருக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை திருநாட்டில், சமய சக வாழ்விற்கு ஆதாரமாக இருக்கும் ஒரு கோவில், நல்லூர்க் கந்தசுவாமி கோவிலாகும். இங்கு இன மத பாகுபாடு பாராட்டப்பட்டு யாரும் கண்டதில்லை. இறைவன் சந்நிதியில் அனைவரும் ஒன்றே என்ற உண்மையை இங்கு காண முடியும். நம் தாய்த்திருநாட்டின் உலகறிந்த அடையாளம் இந்தப் பெருமை மிகு கோவில். அருள் ஒளி வீசும் அற்புத கோவில் இது.

நம் தேசத்திற்குப் பெருமை தரும் வகையில், உலகப்புகழ் பெற்ற நல்லைக் கந்தன் கோவிலின் நிர்வாகத்தினைச் சிறப்புற முன்னெடுத்தவர் குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள். அவருக்குக் கந்தப்பெருமானின் அருட்கடாட்சம் எப்போதும் துணை நின்றது. அதுவே அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## 72ஆவது வருட நிறைவு...





இலங்கை இராணுவத்தின் 72ஆவது வருட நிறைவு நேற்று (10) அநுராதபுரம், சாலியபுர கஜபா றெஜிமென்ட் தலைமையகத்தில் நடைபெற்றது. (படங்கள்: ஜனாதிபதி ஊடகப் பிரிவு)


## கொள்முதல் அறிவித்தல்
## பேருவல பிரதேச சபை

01. பேருவல பிரதேச சபையின் கொள்முதல் குழுவின் தலைவர் மூலம் பின்வரும் கட்டுமான வேலைகளுக்கு சீல் வைக்கப்பட்ட விலை மனுக்கள் 2021.10.29 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளப்படும்

| வேலையின் விபரம் | பதிவு செய்ய தேவையான தரம் | திரும்பி வழங்கப்படும் விலை மனு வைப்பீட்டுத் தொகை | திரும்பி வழங்கப்படாத விலை மனு கட்டணம் |
|---|---|---|---|
| பேருவல பிரதேச சபையின் தர்கா நகரின் பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் | C7 / C8 | 50,000.00 | 3,000.00 |

02. தேசிய போட்டி ஏல முறைக்கு ஏற்ப இந்த விலை மனு கோரப்படுகின்றது.

03. மேலே குறிப்பிடப்பட்ட விலை மனு சம்பந்தமான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள வார நாட்களில் பொதுவான வேலை நேரத்திற்குள் பேருவல பிரதேச சபையின் அளுத்கமயில் உள்ள பிரதான காரியாளயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**தொலை பேசி இலக்கம் : 0342275405 / 0342272936**

04. விலை மனு கோரல் விண்ணப்பங்களை பேருவல பிரதேச சபையின் அளுத்கமயில் உள்ள பிரதான காரியாளயத்தில் **2021.10.11** ஆம் திகதி முதல் **2021.10.28** ஆம் திகதி வரை மு.ப **9.00** மணி முதல் பி.ப **3.00** மணி வரையிலான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

05. விலை மனு பாதுகாப்பு தொகையை பணமாகவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக வங்கி மூலம் வழங்கப்படும் ஏலப் பத்திரத்துடன் முன் வைக்கப்படல் வேண்டும்.

06. உங்களால் முன் வைக்கப்படும் விலை மனு கோரல் விண்ணப்பப்பத்திரத்தை இரண்டு பிரதிகளாக தயார்செய்து தனித் தனி இரண்டு கடிதவுறைகளில் இட்டு கடிதவுறைகளின் வலது பக்க மேல் மூலையில் **"அசல்"** மற்றும் **"நகல்"** என குறிப்பிட்டு மேலும் இடது பக்க மேல் மூலையில் **"பேருவல பிரதேச சபையின் தர்கா நகரின் பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல்"** எனக் குறிப்பிட்டு **2021.10.29** ஆம் திகதி மு.ப **10.00** மணிக்கு முதல் கிடைக்கக்கூடியவாறு **"தலைவர் பேருவல பிரதேச சபை அளுத்கம."** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது எமது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியினுள் இட முடியும். **2021.10.29** ஆம் திகதி மு.ப **10.30** விலை மனுக்கல் திறக்கப்படும். பங்குபற்றவிரும்பு விலைமனு கோருவோர் அல்லது விலைமனு கோருவோரின் அதிகாரமிக்க பிரநிதிகள் அன்றைய தினம் பங்குபற்றலாம்.

07. விலை மனு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கடைசி தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமை பிரதேச சபையின் கொள்முதல் குழுவிற்கு உண்டு.

டீ.டபிள்யூ.எம். மேனகா விமலரத்ன
தலைவர்
பேருவல பிரதேச சபை
அளுத்கம
2021.10.08


## டெங்கு அபாயம்; விழிப்பாக இருக்கவும்

எம்.யூ.எம்.சனூன்

தற்போது,பருவ காலம் ஆரம்பித்து மழை பெய்து வருதால், டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாக புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தெரிவித்துள்ளார்.

எனவே, புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துடன் இணைந்து 'வருமுன் காப்போம் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கமைய புத்தளம் நகர சபையால், டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் நகர சபை எல்லைக்குள் முதற்கட்டமாக ஐந்தாம் வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



நாடு கொரோனா பெருந்தொற்றுக்கு முகங்கொடுத்து, தற்போது படிப்படியாக மீண்டு வருகின்ற இந்நிலையில், மற்றொரு பக்கம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகவும் புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தெரிவித்துள்ளார்

மேலும் அவர் தெரிவிக்கையில், தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால், டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் புத்தளம் சுகாதார வைத்திய பணிமனை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் புத்தளம் பிரதேசத்தில் சில டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பேருவளையில் டெங்கு நோயாளர் அதிகரிப்பு

### கூடுதலாக இளைஞர்களே இணங்காணப்பட்டுள்ளனர்

பேருவளையில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாக பேருவளை வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அங்கு இளைஞர்களே கூடுதலாக டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

டெங்கு நோயிலிருந்து அனைவரும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கும் பேருவளை பொதுச் சுகாதார பரிசோதகர் தாரக பிரியன், குறிப்பாக சிறுவர்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். டெங்குக் காய்ச்சலுக்கான நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் எனவும் பேருவளை பொதுச் சுகாதார பரிசோதகர் அறிவுறுத்தியுள்ளார்.

15 வயதுடைய சிறுவர்கள் இருவருக்கும், 20 - 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கும் கடந்த வாரத்தில் டெங்கு நோய் தொற்று அடையாளம் காணப்பட்டதாகவும் கொரோனா வைரஸ் பாரிய அச்சுறுத்தலாகியுள்ள நிலையில்,



அதற்கு சமமான அளவு டெங்கு நோயும் பரவாமலிருக்க முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

பேருவளை மக்கள் தமது சுற்றுச்சூழலை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும் எனவும் பேருவளை பொதுச் சுகாதார பரிசோதகர் வலியுறுத்தியுள்ளார்.

LK Newspapers Viber Community

“தேவையென்றால்

# எவரையும் மடியில் வைப்பர்”

- சிறையிலும் வைப்பர்
- போலி முகங்களைப் புரிந்துகொள்ளவும்
- ஏற்றுக்கொள்ள முடியாது என்றார் சாணக்கியன்

வா.கிருஸ்ணா

“இந்த அரசாங்கமானது, தேவையென்றால் எவரையும் தனது மடியில் வைத்துக்கொள்ளவும் தமது தேவைக்காக அப்பாவி இளைஞர்களை சிறையில் வைக்கவும் செய்வார்கள்” என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

‘3,000 பனை விதைகள் நடும் வாலிபர்கள்’ எனும் தலைப்பில், பனை விதைகள் நடும் வேலைத்திட்டம், இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிப முன்னணியின் ஏற்பாட்டில், போரதீவுப்பற்றில் நேற்று (10) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய சாணக்கியன் எம்.பி,

“எங்களுடைய அரசியல் ரீதியான விடயங்களில், தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் எவ்வாறு அக்கறையாக இருக்கின்றதோ, அதேபோல எங்களுடைய இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும் நாங்கள் அக்கறையாக இருக்கின்றோம்.

“இந்த அரசாங்கமானது, தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக செய்துகொண்டிருக்கின்ற ஓர் அரசாங்கமாக இருக்கின்றது.

“தெற்கில் விடுதலைப் புலிகளை மீளக்கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பதாகக் கூறி, சிங்களை மக்களை அச்சங்கொள்ளச் செய்வதற்காக, தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.



“தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர்களாகக் கூறி, எந்தவித விசாரணைகளும் இன்றி நீண்டகாலமாக தடுத்துவைத்துள்ளனர்.

“அண்மையில் நடைபெற்ற ஒரு திறப்பு விழாவிலே கே.பியை இந்த நாட்டினுடைய சிறுவர் கல்விக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த கட்டியணைத்து மிகவும் பாசமாக உரையாடினார்.

“விடுதலைப் புலிகளுடைய சொத்துகள் தன்னிடம் இல்லை என்று கே.பி சொல்கின்றார். கே.பி, போர்க்குற்றம் புரிந்தார் எனப் பல குற்றச்சாட்டுகள் அவர் மீது இருக்கின்றன.

“தமிழ் இளைஞரொருவர் பேஸ்புக்கில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட ஒரு செய்தியை பதிவிட்டமை, ஒரு வருடம் சிறையில் வைத்திருக்கக்கூடிய ஒரு குற்றம். ஆனால், கே.பியை நீங்கள் கட்டியணைத்து உறவாடலாம். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

“இதுவே இந்த அரசாங்கத்தினுடைய உண்மையான நிலைப்பாடாகும். இளைஞர்களுக்கு ஒரு நீதி; அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற எவராக இருந்தாலும் அவர்களுக்கு இன்னொரு நீதி என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது” என்றார்.

---

ஊழல் ஆதாரங்களை முன்வைத்தால்

## தண்டனை கொடுக்க தயார்

அஸ்லம் எஸ். மௌலானா



கல்முனை மாநகர சபையில், மாநகர ஆணையாளர், கணக்காளர் ஆகியோர் ஊழல், மோசடிகளில் ஈடுபடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், அதற்கான ஆதாரங்களை முன்வைத்து, நிருபிப்பாரானால் அவ்வதிகாரிகளை சட்டத்தின் முன்னிறுத்தி, அதற்கான தண்டனையை பெற்றுக் கொடுப்பதற்கு, தான் தயாராகவிருப்பதாக மாநகர மேயர் ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையால் சாய்ந்தமருது பிரதேசம் புறக்கணிக்கப்படுவதாக ஜெமீல் தெரிவிக்கும் குற்றச்சாட்டை தான் அடியோடு மறுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது விடயமாக மேயர், நேற்று (10) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

கல்முனை மாநகர சபையில் ஊழல் இடம்பெறுமாயின் அதற்கான ஆதாரங்களோடு சகோதரர் ஜெமீல் அதனை நிருபித்தால், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு, அவர்களுக்கு எந்தத் தண்டனையையும் பெற்றுக் கொடுப்பதற்கு தயாராகவே இருக்கின்றேன்.

கல்முனை மாநகர சபையின் வரவு- செலவு உள்ளிட்ட அனைத்து நிதி சம்மந்தப்பட்ட விடயங்களும் தற்போது கணினி மயப்படுத்தப்பட்டிருக்கின்றன. 10 ரூபாயையேனும் எவராலும் கையாடல் செய்ய முடியாதவாறே மாநகர சபையின் நிதிக்கட்டமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது.

மேலும், ஏனைய ஊர்களைப் போன்றே, சாய்ந்தமருதுக்கும் உரிய சேவைகள் வழங்கப்பட்டுகின்றன. சாய்ந்தமருது நகர சபை கோரிக்கை என்பது, நான் மேயரான பின்னர் உருவான கோஷமல்ல. அது மிக நீண்ட காலமாக இருந்து வந்த கோஷம் என்பதையும் எல்லோரும் அறிவார்கள் என, அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## பெரும்போகம் ஆரம்பம்...

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பெருநிலப்பரப்பின் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் பெரும்போக வேளாண்மை செய்வதற்குரிய வயல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்முறை அப்பிரதேசத்தில் சுமார் 19,069 இற்கு மேற்பட்ட வயற்காணிகளில் பெரும்போக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளன. (படப்பிடிப்பு: வ. சக்தி)




---

கல்லடி பால வாவியை

## நீந்திக் கடந்த இளைஞன்

எம்.எஸ்.எம்.நூர்தீன்




உலக உளநல ஆரோக்கிய தினம், ஒக்டோபர் 10ஆம் திகதி (நேற்று) அனுஷ்டிக்கப்பட்டது. இத்தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு கல்லடி பால வாவியை, இளைஞர் ஒருவர் நீந்திக் கடக்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த 20 வயதுடைய அமலநாதன் சஞ்சீவன் எனும் இளைஞனே இவ்வாறு கல்லடி பாலத்தின் மட்டக்களப்பு நகர் பக்கமாக இருந்து, கல்லடி பக்கமாக நீந்திச் சென்று, உடல் உள ஆரோக்கியம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

தற்போதைய கொவிட் தொற்றுக் காலத்தில் அனைவரும் உள நலத்தையும் உடல் நலத்தையும் பேண வேண்டும் எனவும் இதுவரை கல்லடி பாலத்தில் சுமார் 30 பேர் குதித்து தற்கொலை செய்துள்ளதாகவும் இவ்வாறான தவறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறக் கூடாது எனும் தகவலை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே இந்த நீச்சல் நடவடிக்கையை தான் மேற்கொண்டதாக அமலநாதன் சஞ்சீவன் தெரிவித்தார்.

---

எனது சட்டமூலத்தை உபயோகித்து

# தேர்தலை நடத்தலாம்

க. அகரன்

நான் தயாரித்த சட்டமூலத்தை உபயோகித்து, மாகாண சபைத் தேர்தலை நடத்த பலரும் விருப்பம் தெரிவித்துள்ளனர் என, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம் ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.



வவுனியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் முறை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே, இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

“வெள்ளிக்கிழமை (08) நடைபெற்ற பாராளுமன்ற தெரிவுக்குழு தேர்தல் முறை மறுசீரமைப்பு பற்றிய கூட்டத்தில், இந்தத் தெரிவுக்குழுவுக்கு பசில் ராஜபக்‌ஷவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழு ஆரம்பித்ததிலிருந்து, மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதனை நாங்கள் சிலர் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். அதை நகர்த்துவதில் உள்ள சட்டச் சிக்கல்கள் சம்பந்தமாக, ஒவ்வொரு தடவையும் பிரஸ்தாபிக்கப்படும். ஆனாலும் ஒரு சிறிய சட்ட திருத்தத்தின் மூலமாக, முன்னர் இருந்த தேர்தல் முறையையே பின்பற்றி, தேர்தல் நடத்த முடியும் என்ற கருத்தை நான் வெளிப்படுத்தியிருந்தேன். அதற்கான ஒரு சட்ட மூலமும் 2019ஆம் ஆண்டில், பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தேன். அதன் அடிப்படையில், இது செய்யப்படலாம் என்ற கருத்து கூறிய போது, சட்டமா அதிபருடைய ஆலோசனை பெறப்பட்டது. இறுதியாக சட்டமா அதிபரும் அந்த முறையிலும் செய்யலாம் என்ற ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தப் பின்னணியில்தான், வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்கு வந்திருந்த பசில் ராஜபக்‌ஷ, வெகுவிரைவாக மாகாண சபை தேர்தலை நடத்துவதென்று அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாக அறிவித்தார்.

தங்களுக்கும் மாகாண சபை தேர்தல் நடத்த வேண்டும் என்ற தேவையும் அழுத்தங்களும் இருப்பதாக கூறினார். இது இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வந்து சென்றதன் பின்னர் இதை கூறியுள்ளார்.

எது எப்படியாக இருந்தாலும், மாகாண சபை தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும் என்பது எங்களுடைய நிலைப்பாடாக, தொடர்ச்சியாக இருந்து வந்துகொண்டிருக்கின்றது.

ஆகையால், என்னுடைய சட்டமூலத்தை உபயோகித்து, ஒரு சட்ட திருத்தத்தை உடனடியாக செய்து, மாகாண சபை தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தை பல உறுப்பினர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

நான் தயாரித்திருந்த சட்ட மூலத்தை தற்போது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன செயலாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை இது குறித்து ஆலோசித்து ஒரு முடிவெடுத்து, அப்படி செய்வதாக இருந்தால் வருகின்ற நாள்களிலே அதனை வர்த்தமானியில் பிரசுரித்து ஓர் அரசாங்க வரைபாக, சட்டமூலமாக அதனை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்” என்று சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

---

யாழ். பல்கலையில்

## தடுப்பூசி செலுத்தும் திட்டம் மீண்டும் ஆரம்பம்

எஸ். நிதர்ஷன்



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய, இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் மாணவர்கள், பணியாளர்களுக்கான கொவிட் 19 தடுப்பூசி செலுத்தும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், இன்று (11) முதல் 15ஆம் திகதி வரை தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நெறிப்படுத்தலில், நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால், இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தினமும் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை, பல்கலைக்கழக சுகநல நிலையத்தில் தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன. பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களும் பணிபுரிவோரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்றும், தடுப்பூசி செலுத்த வரும் போது தேசிய அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---



## கப் வாகனம் விபத்து; மூவர் காயம்

செந்தூரன் பிரதீபன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியில், நேற்று (10), கப் ரக வாகனம் விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவரின் தலைக்கவசம் கீழே விழுந்ததையடுத்து, சமிக்ஞைகள் ஏதும் இல்லாமல், வீதியின் குறுக்கே அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளார்.

இதன்போது, கிளிநொச்சி நோக்கி வந்த குறித்த கப் ரக வாகனம், எதிரே நின்ற மோட்டார் சைக்கிளை அவதானித்து நிறுத்த முற்பட்ட வேளை, அருகில் இருந்த நீர்பம்பியின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் கப் ரக வாகனத்தில் பயணித்த மூவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## மாப்பாண முதலியாரின் பூதவுடல் அக்னியுடன் சங்கமம்

எஸ்.நிதர்ஷன், செந்தூரன் பிரதீபன்



நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாகி இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் பூதவுடல், நேற்று (10) அக்னியுடன் சங்கமமாகியது.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாகி இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் பூதவுடல், நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

அவரது உடலுக்கு பெருமளவானோர் அஞ்சலி செலுத்தினர். குறிப்பாக அவருடைய உடலுக்கு பொதுமக்களும் அரசியல்வாதிகளும் முக்கியஸ்தர்களும் அஞ்சலி செலுத்தினர்.

இறுதி நிகழ்வுகள், சுகாதார நடைமுறைகள் மிக இறுக்கமாக பின்பற்றப்பட்டு நடைபெற்றன.

---

கால்வாயில் இருந்து

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு



சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில உள்ள பிரதான கால்வாயில் இருந்து, நேற்று (10) பிற்பகல், குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

51 வயதுடைய இராமலிங்கம் புஸ்பராஜ் எனும் 6 பிள்ளைகளின் தந்தையே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (09) இரவு, வேலை முடித்து விட்டு, தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த குறித்த நபர், காணாமல் போயிருந்தார். இந்நிலையில், நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

வீட்டின் மீது

## பெற்றோல் குண்டு வீச்சு



யாழ்ப்பாணம், அரியாலை பகுதியில் உள்ள வீடொன்றின் மீது, வன்முறை கும்பல் பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சமபவம், நேற்று முன்தினம் (09) இரவு இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

---

இரண்டு வாள்களுடன்

## 18 வயது இளைஞன் கைது

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து, நேற்று முன்தினம் (09) இரவு, 2 வாள்கள் மீட்கப்பட்டுள்ளன. யாழில் உள்ள வாள்வெட்டு குழுவைச் சேர்ந்த 18 வயதான சந்தேக நபரின் வீட்டில் இருந்தே, இந்த வாள்கள் மீட்கப்பட்டுள்ளன என, கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், குறித்த சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

LKNewspapers Viber Community

# பூஜை நிகழ்வு





பலாங்கொடை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில், 'இரத்தினபுரி உதவும் கரங்கள்' அமைப்பின் இளைஞர் அணியின் இணைப்பாளரும், அமைப்பின் கல்வி செயற்பாட்டாளருமான ஆசிரியர் ஆர். மனோகரனின் தலைமையில், இளைஞர் அணியின் பலாங்கொடை இணைப்பாளர் இளையராஜாவின் பங்குபற்றுதலுடன் நவராத்திரி பூஜை இடம்பெற்றிருந்தது. (ராமு தனராஜா)

# உச்சிமலையில் சிறுவர் தினம்




கண்டி, திகனையை தலைமையகமாகக் கொண்டு மலையகத்தில் பொதுப்பணிகளில் ஈடுபட்டுவரும் தீர்வு (சொலூசன்) தொண்டு நிறுவனம், மாத்தளை எல்கடுவ பெருந்தோட்டத்தின் உச்சிமலை பிரதேசத்தில் அண்மையில் சிறுவர் தின நிகழ்வுகளை நடத்தியது. (மொஹொமட் ஆஸிக்)




# உலருணவுப் பொருட்கள் கையளிப்பு



ஸ்ரீ சத்யசாயி வித்யா நிலைய சர்வதேசப் பாடசாலையும் ஸ்ரீ சாயி நிலையமும் இணைந்து, சிறுவர் தின மற்றும் முதியோர் தின நிகழ்வின் போது, தலவாக்கலை பிரதேசத்தில், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறார்கள், முதியோருக்கு உலருணவு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது ஸ்ரீ சாயி நிலைய பொதுச் செயலாளர் டொக்டர் வே. கருணைராசன், ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலைய அதிபர் க. உமாதர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர். (கேதீஸ்)





### கோதுமை, காஸ் ஆகியவற்றை

# பதுக்கிய வர்த்தகர்கள்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



சமையல் எரிவாயு, கோதுமை மா என்பவற்றின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய, ஹட்டன் உள்ளிட்ட மலையகத்தின் பிரதான நகரங்கள் பலவற்றில் சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையங்கள் நேற்றைய தினம் (11) மூடப்பட்டிருந்தன.

தமது விற்பனை நிலையங்களுக்குக் கிடைக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர்களை நகரிலுள்ள ஹோட்டல்களுக்கு வழங்கியதால், நுகர்வோருக்கு வழங்குவதற்கு தம்வசம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இல்லை என்றும் சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், விலை அதிகரிக்கப்படவுள்ளதால் சிலிண்டர்களை விற்பனை நிலைய உரிமையாளர்கள் மறைத்து வைத்திருப்பதாக நுகர்வோர் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இதேவேளை இன்றிலிருந்து (11) கோதுமைமாவின் விலை அதிகரிக்கப்படும் என கோதுமை மா உற்பத்தி நிறுவனங்கள் அறிவித்துள்ளதால், மலையகத்தின் பெரும்பாலான நகரங்களின் வர்த்தக நிலையங்களில் கோதுமைமா பதுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த வர்த்தகர்கள் பேக்கரிகளுக்கு மாத்திரம் கோதுமைமாவை விநியோகித்துள்ளதாகவும் நுகர்வோர் குற்றஞ்சுமத்துகின்றனர்.

### அரசாங்கத்தால்

# முடியாது

## இராதா எம்.பி தெரிவிப்பு

■ எஸ்.கணேசன்


“பொருட்களின் விலை உயர்வைக்கூட இந்த அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. இறக்குமதியாளர்களும் உற்பத்தியாளர்களும் விலையைத் தீர்மானிக்கும் நிலைமை உருவாகியுள்ளது. அப்படியானால் அரசாங்கம் எதற்கு, அமைச்சரவை எதற்கு என பாராளுமன்ற உறுப்பினர் வே. இராகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தலவாக்கலையில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் பழைய முறைமையிலேயே நடத்தப்படும் என பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அரசாங்கம் அறிவித்துள்ளது. தேர்தல் என்பது ஜனநாயக அம்சம். எனவே, தேர்தல் நடைபெறுவதை நாம் வரவேற்கின்றோம்; ஆதரவையும் வழங்குவோம்.

இந்தியாவின் அழுத்தத்தாலேயே தேர்தல் நடத்தப்படுகின்றது. ஆனாலும் அவ்வாறு இல்லை என வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார். எம்மைப் பொறுத்தமட்டில் சர்வதேச அழுத்தத்தாலேயே தேர்தலுக்கான ஏற்பாடு இடம்பெற்று வருகின்றது.




அதேவேளை, முன்னரெல்லாம் வரவு - செலவுத் திட்டம்வரும்போதுதான் பொருட்களின் விலை மறுசீரமைக்கப்படும். ஆனால், இன்று நாளாந்தம் அதிகரிப்பு இடம்பெறுகின்றது. இறக்குமதியாளர்களும் உற்பத்தியாளர்களுமே விலையை நிர்ணயிக்கின்றனர். அப்படியானால் அரசாங்கம், அமைச்சரவை எதற்கு என்றார்.

# மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவும்

## மத்திய மாகாண சபையின் முன்னாள் தலைவர் கோரிக்கை

■ மொஹொமட் ஆஸிக்

மாகாண சபைத் தேர்தல்களுக்கு கால தாமதம் ஏற்படுத்தக் கூடாது. அது ஜனநாயக செயற்பாடுகளில் அடிப்படையை மீறுவதாகும் என முன்னாள் மத்திய மாகாண சபைத் தலைவர், துரை மதியுக ராஜா தெரிவித்தார்.



நேற்று (10) கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், மாகாண சபை பொறிமுறையில் இன்று மக்கள் பிரதி நிதித்துவம் முடக்கப்பட்டுள்ளமை பாரிய கவலையளிப்பதாக உள்ளது

மத்திய மாகாண சபை கலைக்கப்பட்டு மூன்று வருடங்கள் ஆகின்றன. அதேபோல் கிழக்கு, சப்ரகமுவ மாகாண சபைகள் கலைக்கப்பட்டு ஆறு வருடங்கள் ஆகின்றன. சிறுபான்மை மக்கள் தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு பொறிமுறையாக மாகாண சபைகள் கொண்டு வரப்பட்டன. இருப்பினும் இன்று நடைமுறையில் அது இல்லை. எனவே தமது பிரதிநிதிகளை இழந்த நிலையில், மக்கள் காணப்படுகின்றனர்.

சகல அதிகாரங்களும் ஆளுநர் கையிலும் செயலாளர்கள் கையிலும் தங்கி உள்ளன. தட்டிக்கேட்க அல்லது கோரிக்கைகளை முன்வைக்க மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில், அநீதிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இந்நிலையானது மலையகம், வடக்கு, கிழக்கு தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு பாரிய இழப்பாகக் கருதமுடியும். எப்படிப்பார்த்தாலும் பரந்து விரிந்து வாழும் சிறுபான்மையினருக்கு விகிதாசார முறையே பொருத்தமாகும் என்றார்.

### பால்மா விலை அதிகரிப்பு

# அநீதியானது

## நுகர்வோர் தெரிவிப்பு

■ கே.சுந்தரலிங்கம்



கடந்த ஒன்றரை மாத்திற்கும் மேலாக நாட்டில் பால்மா தட்டுப்பாடு நிலவி வருவதால், மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பிள்ளைகளுக்கு பால் இன்றி தாய்மார் பெரும் அவதிப்படுகின்றனர். ஹோட்டல்களில் பால்மா தட்டுப்பாடு காரணமாக வர்த்தக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சுமார் 400 கிராம் பால்மாவுக்கு பால் இறக்குமதியாளர்கள் 100 ரூபாயால் விலை அதிகரித்துள்ளமை மிக பெரிய அநீதியாகுமென நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து பொது மக்கள் கருத்து தெரிவிக்கையில், "கடந்த ஒன்றரை மாதத்திற்கு மேலாக, பால்மா இன்றி மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். பலர் பால்மாவைத் தேடி, கடை கடையாக அலைந்து திரிகின்றனர். பிள்ளைகள் பால் இன்றித் தவிக்கின்றனர். இந்நிலையில் அதிக விலையில் அதிகரித்திருப்பது தாங்கிக்கொள்ள முடியாத பொருளாதார சுமை" எனத் தெரிவிக்கின்றனர்.

### தீயில் கருகிய ஐவரின் சடலங்களும்

# இரவில் நல்லடக்கம்

## விசாரணைகள் தொடர்கின்றன

■ பி.கேதீஸ்



இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில், இந்த மாதம் 7ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை, மகள் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகள் ஆகியோரின் இறுதிக் கிரியைகள் 9ஆம் திகதி இரவு இடம்பெற்றன.

இராகலை முதலாம் பிரிவு தோட்ட மைதானத்தில், சடலங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர், அத்தோட்ட பொது மயானத்தில் ஐவரின் சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

இறந்தவர்களின் மரண பரிசோதனை, நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் நடத்தப்பட்டது.

இதன்போது நுவரெலியா சட்ட வைத்திய அதிகாரியால் திறந்த அறிக்கை வெளியிடப்பட்டதோடு, உடற் கூறு மாதிரிகளை இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டீ.எம்.ஜெ.சமரகோன் உள்ளிட்ட குழுவினர் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

UK Newspapers Viber Community

# தட்டுப்பாட்டைக் குறைக்கும் முடிவை மக்களால் தாங்க முடியவில்லை

எடுக்கப்படும் முடிவுகள், ஆட்சியின் மீதான நம்பிக்கையை மென்மேலும் இரட்டிப்பாக்க வேண்டுமே தவிர, முகம் சுளிக்க வைத்துவிடக்கூடாது. ஆனால், தட்டுப்பாட்டைக் குறைக்கும் வகையில், இவ்வரசாங்கத்தால் எடுக்கப்படும் தீர்மானங்கள், மக்கள் தாங்கிக்கொள்ள முடியாமல் தவிர்ப்பதைக் கூட்டிவிட்டுள்ளது.

பால்மா, கோதுமைமா, சீனி, காஸ் உள்ளிட்டவற்றுக்கான கட்டுப்பாடுகளை நீக்க அமைச்சரவை தீர்மானித்தமையால், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள், நாளுக்கு நாள் கிடுகிடுவென அதிகரித்துகொண்டே செல்கின்றன. இது மக்களின் வாழ்க்கை மீதான சுமையை மேலும் அதிகரித்துவிட்டது.

அந்நிய செலாவணி நெருக்கடியின் மத்தியில், உணவுப் பொருட்களுக்குப் பற்றாக்குறை மோசமடைந்து வருகிறது. இந்நிலையில், கறுப்புச் சந்தை வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலேயே, அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக் கட்டுப்பாட்டை அரசாங்கம் நீக்கியிருந்தது.

இதையடுத்து, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மட்டுமன்றி, அத்தியாவசியமற்ற பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்துக்குள் சிக்கி, வீடுகளிலேயே முடங்கியிருந்த மக்கள், கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வருகின்றனர். சிலர், குடும்பம் குடும்பமாக நகரங்களுக்குச் சென்று, பொருட்களைக் கொள்வனவு செய்துவருகின்றனர்.

வீட்டுக்குள்ளே முடங்கி இருந்தமையால், ஆடைகள் உள்ளிட்ட இன்னும் பலவற்றைக் கொள்வனவு செய்யவேண்டும். எனினும், எவ்விதமான வர்த்தகச் செயற்பாடுகளும் இன்றியிருந்த வர்த்தர்களும், கண்களை மூடிக்கொண்டு விலையைத் தீர்மானிக்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக்கட்டுப்பாட்டை நீக்குவதன் ஊடாக, மூலப்பொருட்களின் நிரம்பல் அதிகரிக்குமென அரசாங்கம் நம்புகின்றது. ஆனால், விலை அதிகரிப்பே பெரும் சுமையாகி நிற்கிறது. மனச்சாட்சி அற்றவகையில், வர்த்தகர்கள் விலைகளை அதிகரிக்க மாட்டார்கள் என அரசாங்கம் நம்பினாலும், அந்த நம்பிக்கையின் மீது மண்ணை வாரி இறைத்தாற்போல, எல்லாமே தலைகீழாக நிற்கிறது.

அவசரகால நிலையை ஒகஸ்ட் 31ஆம் திகதியன்று அரசாங்கம் அறிவித்தமையால், விவசாயிகள் தங்களுடைய அரிசியை, அரச நிறுவனத்துக்கு விற்பனை செய்யவேண்டிய கட்டாய நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. தனியார் களஞ்சியசாலைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன. ஆனாலும், பொருட்களுக்கான தட்டுப்பாடு மோசமடைந்திருந்தது.

பங்கீட்டு நடைமுறையின் போது, அரச விற்பனை நிலையங்களில் ஒரு கிலோகிராம் சீனி மட்டுமே கொள்வனவு செய்யமுடிந்தது. கொழும்புத் துறைமுகத்தில் தடுக்கப்பட்டிருக்கும் பால்மா கொள்கலன்களை விடுவிப்பதற்கு, மத்திய வங்கி 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடுவித்தது.

இந்நிலையில், இதன்படி, ஒரு கிலோகிராம் பால்மா 250 ரூபாயாலும், 400 கிராம் பால்மா 100 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, சந்தையில் தட்டுப்பாடு நிலவியிருந்த நிலையில், இவ்விலை அதிகரிப்பு, பதுக்கல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் வர்த்தகர்களுக்கு, ஓர் அதிர்ஷ்டமாக அமைந்துவிட்டது.

வர்த்தகர்களும் நுகர்வோரும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து தீர்மானங்களை எடுத்தலே, தற்போதைய சூழ்நிலையில், அரசாங்கத்தின் பொறுப்புணர்வு மிக்க கட்டாய கடமையாக அமைந்துள்ளது.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பாமரன் சொல்பவற்றையும் கேட்டறிய வேண்டும். அவர்களுக்கும் மிகஉயர்வான உணர்வும் சிந்தனையும் உண்டு. பாமரன், சமானியன் இல்லை. அனுபவஞானம் பொருந்திய, மதிநுட்பம் உடையவன்.

எளிமையிலும் அழகுண்டு. பண்டைக்காலம் முதல் இன்றுவரை, எளிமையாக வாழ்ந்துவரும் மாந்தர்கள், கேள்விஞானத்தால், புகழ்பெற்ற படைப்புகளைப் படைத்திருக்கிறார்கள். கல்விமான்கள் அவற்றைப் போற்றிவருகின்றார்கள்.

வயல் வேலைகள், கடின வேலைகளைச் செய்யும்போது, தங்களை மறந்து, உணர்வு நிறைந்த பாடல்களைப் பாடி, களைப்பை மறந்தனர். தற்போது இந்த இசை வடிவங்கள், நாட்டுப்புறப் பாடல்களாக எம்மை அசரவைக்கின்றன. உடலை வருத்தி உழைப்பவர்கள், புறஉலகுடன் இணைந்தால் கஷ்டங்கள் இல்லாமல் போய்விடுகின்றன. புவனத்தின் புதல்வர்கள் மக்கள்; ஏற்றத்தாழ்வு வேண்டாம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ராஜபக்‌ஷர்கள் முன்னுள்ள வாய்ப்பு




என்.கே. அஷோக்பரன்
twitter: @nkashokbharan


சுதந்திரகாலம் முதல் இனமுறுகல், இனவாதம், இனத்தேசியம் ஆகியவற்றால் விளைந்த இனத்துவேசம், இனப்பிரச்சினை ஆகியவற்றுக்குள் சிக்குண்டு, இலங்கை தீவின் அரசியல் சின்னாபின்னமாகி நிற்கிறது.

சுதந்திரகாலம் மற்றும் அதற்கு முற்பட்ட தலைவர்கள் கனவு கண்டது போல, இனத்தேசியவாதம், இனவாதம், இனப்பிரிவினை ஆகியவையற்ற சிவில் தேசமாக, இலங்கை ஒருவேளை கட்டியெழுப்பப்பட்டு இருந்தால், இலங்கையின் நிலை இன்று வேறாக இருந்திருக்கலாம். ஏனெனில், சுதந்திர காலத்திலேயே பொருளாதார ரீதியில் பலமான நாடாகவும் வளமான எதிர்காலத்தை நோக்கிய நாடாகவும் இலங்கை இருந்தது. ஆனால், இனவாத அரசியல் இலங்கையின் தலையெழுத்தை மாற்றிப் போட்டது.

இனவாதத்துடன் இணைந்த பெருந்திரள்வாத அரசியல், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான இலகுவான வழியாகக் காணப்பட்டமை, அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணமும் சுயநலமும் மிக்க அரசியல்வாதிகளுக்கு இனவாத, பெருந்திரள்வாத அரசியல் மீதான ஈர்ப்புக்குக் காரணமாயிற்று.

இலங்கையின் பேரினவாத, பெருந்தேசிய அரசியலுக்கு எதிராக, தமிழ்த் தேசிய அரசியல் தற்காப்புத் தேசியமாகப் பிறந்து, வளர்ந்து நிற்கிறது. உண்மையில், இலங்கையில் இனவாத, பெருந்திரள்வாத அரசியலுக்கு மாற்றானதும் வலுவானதுமான அரசியல் முன்னெடுக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய உண்மை. மிகச் சிறிய, சில கட்சிகள், இதனை முயற்சித்திருக்கலாம், ஆனால், அதை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கும் வலுவோ, செல்வாக்கோ அவர்களிடம் இருக்கவில்லை.

இதேவேளை, மக்கள் செல்வாக்கும் கட்சிப்பலமும் பிரபல்யமும் மிக்க அரசியல்வாதிகள், தமக்கு அதிகார பலத்தைப் பெற்றுத்தரவல்ல இனமைய அரசியலைத் தாண்டி, சிந்திக்கத் தயங்கினார்கள். இதன் விளைவு இனவாதம், இனத்தேசியம், இனவெறி எனும் விஷச்சில்லுக்குள், இலங்கை சிக்கிக்கொண்டுள்ளது.

இலங்கை அரசியலில், குறிப்பிடத்தக்க இடதுசாரிக்கட்சிகள் கூட, இனவாதத்தைக் கக்கியவையாகவும் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை அமைதியாக ஆதரித்தவையாகவுமே இருந்திருக்கின்றன என்பதும் கவனிக்கத்தக்க வரலாறு.

முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கத்தை அடக்குமுறைக்கு உள்ளாக்குகிறது என்றவர்கள் கூட, பெரும்பான்மைத் தேசம், சிறுபான்மைத் தேசங்களை அடக்குமுறைக்கு உள்ளாக்குவது பற்றி அக்கறை கொள்ளவில்லை.

30 வருட யுத்தம், இலங்கையின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் பெருமளவு பாதித்தது. இலங்கையிலிருந்து பல்லாயிரம் மூளைசாலிகள் வெளியேறினார்கள். இதன் தாக்கத்தை, இன்று மட்டுமல்ல, அடுத்த தலைமுறை கடந்தும் இலங்கை சந்தித்துக் கொண்டேயிருக்கும். இத்தனைக்கும் காரணம், அரசியல்வாதிகளின் சுயநலம்.

எல்லா நாடுகளிலும் தீவிரவாத எண்ணம் கொண்ட, துவேசம் மிக்க வெறுப்பை விதைக்கும் மிகச் சொற்ப மக்கள் கூட்டமொன்று இருந்துகொண்டேயிருக்கும். ஆனால், அவற்றுக்கு அரசியல் முன்னரங்கில் இடங்கொடுக்காமல் இருப்பதில்தான், அந்நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. உதாரணத்துக்கு நோர்வே, பின்லாந்து, கனடா போன்ற நாடுகளில், இனத்துவேச எண்ணம் மிக்கவர்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால், அந்த நாடுகளின் அரசியல் முன்னரங்கில், இனவாதத்துக்கு இடமளிக்கப்படுவதில்லை.

இலங்கை அரசியலிலும் அது முடியாத காரியமல்ல. ஆனால், அந்த மாற்றத்தைச் செய்வதற்கு, பலமும் தன்னம்பிக்கையும் முதுகெலும்பும் உள்ள அரசியல் தலைவர்கள் அவசியம் தேவை.

இன்று, ஆளுங்கட்சியினரை இனவாதிகள் என்று சொல்லிக்கொண்டு, அதே இனவாதத்தைப் பயன்படுத்தி, தாமும் ஆட்சியைக் கைப்பற்றிவிட முடியாதா என்று அவாக்கொள்ளும் எதிர்க்கட்சிகளைத்தான் நாம், பார்த்துக் கொண்டிருக்கிறோம். எம்மில் யார் பெரிய இனவாதி என்ற போட்டிதான், இலங்கையின் தேசிய அரசியலுக்கு உரமாக அமைகிறது.

இதற்கு மிக முக்கிய காரணங்களாக அமைவது, அரசியல் தலைவர்கள் என்று தம்மை முன்னிறுத்துவோரின் ஆளுமைக்குறைவும் தன்னம்பிக்கை இன்மையும் நேர்மையின்மையும் குறுகிய சிந்தனையும் சுயநலமும்தான்!

'சிறிய அர்ப்பணிப்புள்ள ஒரு தலைவரைக் கொண்ட குழுவொன்றின் முயற்சிகள் புறநிலையாகவும், எந்தவொரு சுயநலமும் இல்லாமல் செயற்படும்போது, பெரும்பாலும் தீர்க்க முடியாத சிக்கல்களை அதனால் தீர்க்க முடியும்' என்று நெல்சன் மண்டேலா குறிப்பிடுவதை, இங்கு கவனிக்க வேண்டும். அத்தகைய தலைவர்கள், இன்றுவரை இலங்கைக்கு கிடைக்கவில்லை.

ஆங்காங்கே சில ஒளிக்கீற்றுகள் தோன்றியிருப்பினும், அவை மின்மினிகளைப் போல விரைவில் மறைந்துவிட்டன. ஓர் உதாரணத்துக்கு சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் பிரவேசத்தைக் குறிப்பிடலாம். சந்திரிகாவின் அரசியல் எழுச்சி, சமாதானத்துக்கான நம்பிக்கையை விதைத்திருந்தது. ஆனால், அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவதில், சந்திரிகா தவறியது மட்டுமல்லாது, தான் கொடுத்த நம்பிக்கைக்கு நேரெதிராகவும் செயற்பட்டார்.

தமிழ்த் தலைமைகளும் ஒன்றும் சிறப்பானவர்கள் அல்ல; பேரினவாதத்துக்கு எதிரான, தமிழ்த் தேசிய அரசியலை அவர்கள் உணர்ச்சிவயப்பட்ட, வாய்ச்சொல் பகட்டாரவார அரசியலாக முன்னெடுத்தார்கள். அது மட்டும்தான் அவர்களுக்குத் தெரியும். காலங்காலமாக அதையே செய்து, தமது பதவிகளைக் காப்பாற்றிக்கொண்டு, வயிறுவளர்த்து வரும் கூட்டமாக அவர்கள் இருக்கிறார்கள்.

பெரும்பாலும் வயிற்றுப்பிழைப்புக்கு அரசியலில் தங்கியவர்களாக அவர்கள் இருப்பதால், அரசியல் பிழைப்புவாதத்தை உறுதிப்படுத்தும் வாய்ச்சொல் பகட்டாரவார அரசியலைத் தாண்டிச் சிந்திக்க அவர்கள் தயாராக இல்லை. அப்படிச் சிந்திக்கும், செயற்படும் புதியவர்கள் யாராவது வந்தாலும், அவர்களைத் 'துரோகி'கள் என்று முத்திரை குத்தி, ஓரங்கட்டி விடுகிறார்கள்.

அழிவுப்பாதை அரசியலிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுத்து, வழிகாட்டும் அளவுக்கான அறிவோ, அனுபவமோ, ஆற்றலோ, தன்னம்பிக்கையோ, இயலுமையோ இல்லாதவர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள்.

இதுதான் இலங்கை அரசியலின் நிலை. இந்த அரசியல் தலைமைகளின் இயலாமையால்தான், இன்று இனவாத, இனவெறி அரசியலுக்குள் இலங்கை உழன்று கொண்டும், எதிர்காலத் தலைமுறையின் சிந்தனையைப் பாழாக்கிக்கொண்டும் இருக்கிறது. அப்படியானால் இதற்கு மாற்றே இல்லையா?

இலங்கையின் இந்த இனவாத, அரசியலை மாற்றும் பலம், ஒருமுறை ஒருவரின் கையில் இருந்தது. 2009இல், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தபோது, அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவிடம், இலங்கை வரலாற்றில் அதுவரை காலமும் எந்தத் தலைவரிடமும் இல்லாத ஒரு பலம் இருந்தது.

'இத்தோடு இனவாத, இனவெறி அரசியலை முடிவுக்குக் கொண்டு வருவோம்' என்று மஹிந்த தீர்மானித்திருந்தால், அதன் பின்னர் ஒன்றுபட்ட இலங்கையை கட்டியெழுப்பவும் ஓர் அரசுக்குள் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்கி, அனைத்து மக்களும் சுயமரியாதை, சுயகௌரவம், சுயநிர்ணயத்துடன் வாழ வழிசமைத்திருந்தால், அது இலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்திருக்கும்.

'யுத்தத்தை வெற்றிகொண்ட' மஹிந்த ராஜபக்‌ஷ அதைச் செய்திருந்தால், அதைத் தட்டிக்கேட்கவும் எதிர்க்கவும் எந்தவொரு பேரினவாதியாலும் முடியாதிருந்திருக்கும். ஆனால், அதைச் செய்யும் பலமும் தன்னம்பிக்கையும் அன்று மஹிந்தவிடம் இருக்கவில்லை என்பது வரலாற்றுச் சோகம். மஹிந்த ராஜபக்‌ஷவைத் தோற்கடித்து, 2015இல் வந்த அரசாங்கம் செய்தது வரலாற்றுத் துரோகம். அதைப் பற்றிப் பேசுவது கூடப் பயனற்றது.

மீண்டும் பெருவெற்றி பெற்று, ராஜபக்‌ஷர்கள் ஆட்சிப்பீடமேறி, இரண்டு ஆண்டுகள் ஆகப்போகின்றன. கடந்த ஓராண்டுக்கும் மேலாக, பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வாய்ப்பு இன்னும் ராஜபக்‌ஷர்களிடம் இருக்கிறது.

2009இல் இருந்ததைப் போன்ற தார்மீக பலம் இல்லாவிட்டாலும், பெரும்பான்மையினரை நம்பிக்கை கொள்ளச்செய்யத்தக்க இயலுமை அவர்களிடம் இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை, எல்லா ராஜபக்‌ஷர்களும் ஒன்றிணைந்து, இலங்கையின் வரலாற்றை மாற்றியமைக்கப் பயன்படுத்த வேண்டும்.

எந்த அரசாங்கத்தாலும், மிக இலகுவாக அத்தியாவசியப் பொருட்கள் மீதான கட்டுப்பாட்டு விலையை நீக்க முடியாது. ஆனால், ராஜபக்‌ஷர்கள் அதைக்கூடச் செய்தார்கள். அது காலத்தின் அத்தியாவசியத் தேவையாக இருக்கலாம். ஆனால் அதைச் செய்யும் பலம், அவர்களிடம் இருக்கிறது.

இன்று, கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையம், இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இத்தகைய தனியார் மயமாக்கல்களை ஐ.தே.க, தொழிற்சங்கங்களின் செல்வாக்கைக் கடந்து செய்ய முடியவில்லை. ஆனால்,ராஜபக்‌ஷர்களால் அந்த எதிர்ப்புகளை இலகுவாகக் கடந்து, அதைச் செய்ய முடிந்திருக்கிறது.

இன்றைய சூழலில், இலங்கையின் இனவாத அரசியல் பாதையை மாற்றி அமைக்கக் கூடிய வலு, ராஜபக்‌ஷர்களிடம்தான் இருக்கிறது; அதற்கான அருமையான சந்தர்ப்பமும் இருக்கிறது.

அவர்கள் இனவாத அரசியலைக் கைவிட்டு, இலங்கையை வளமான பாதைக்கு அழைத்துச் செல்வார்களா? அல்லது, 2009ஐப் போலவே, குறுகிய சுயநல அரசியலை முன்னெடுத்துவிட்டுப் போய்விடுவார்களா என்பதுதான், இங்கு கேள்வி. இலங்கையின் எதிர்காலம், இன்று அவர்களின் கையில் இருக்கிறது.

## கடிதங்கள்

### கிளிநொச்சியில் குற்றங்களை ஊக்குவிக்கும் பொலிஸார்

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராது, அவை அதிகரித்துச் செல்வதற்கு பொலிஸாரின் அசமந்தப் போக்கே காரணம் என, பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி, தர்மபுரம், கல்லாறு பகுதியில், பொலிஸ் அதிகாரிகள் இருவர் வாள் வெட்டுக்கு இலக்கான சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவம், விசேட அதிரடிப்படை, பொலிஸ் என, குறித்த கிராமத்தைச் சுற்றி வளைத்து, தேடுதல் மேற்கொண்டு, சந்தேக நபர்களைக் கைது செய்தது போன்று, பொது மக்களுக்கு இடம்பெறுகின்ற சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்றும் பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குற்றச் செயல்கள் தொடர்பில், வலுவான ஆதாரங்களுடன் பொலிஸாருக்கு தகவல் வழங்குகின்ற போதும், அவை தொடர்பில் பொலிஸார் மென்போக்காக நடந்துகொள்கிறார்கள். குறிப்பாக, குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றின் முன்நிறுத்தப்படுகின்றபோது, குற்றவாளிகளுக்கு எதிராகப் பொலிஸார் மென்போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் குற்றவாளிகள் சுதந்திரமாக வெளியே வந்து, வழமையான குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

வாள்வெட்டுக் குழுக்கள், மணல் கடத்தல், கஞ்சா, கசிப்பு என சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பில், போதுமான தகவல்கள் தெரிந்தும், பொலிஸாரின் அசமந்தப் போக்கின் காரணமாக, சமூகத்தைச் சீரழிக்கும் செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன. எனவே, மக்கள் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகள் அனைவரும் கவனம் செலுத்தி, சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க, பொலிஸாரைத் தூண்ட வேண்டும்.

-மு. தமிழ்ச்செல்வன்

சென்னை


# “மூன்றாவது தடுப்பூசி தேவையில்லை”

கொரோனா தொற்றின் மூன்றாவது தவணை தடுப்பூசி அவசியம் இல்லை என மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் நேற்று (10) அளித்த பேட்டியில் தெரிவித்ததானது:


“தமிழகத்தில் இன்று 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில், ஐந்தாவது மெகா தடுப்பூசி முகாம் நடக்க உள்ளது. இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்த வேண்டியவர்கள் செலுத்திக் கொள்ள வேண்டும். ஆறு இலட்சம் பேர் ‘கோவாக்சின்’ தடுப்பூசியையும், 19 இலட்சம் பேர் ‘கோவிஷீல்டு’ தடுப்பூசியையும் செலுத்த வேண்டியுள்ளது. தடுப்பூசிகள் கையிருப்பு உள்ளதால், இரண்டாவது டோஸ் செலுத்த வேண்டியவர்கள், அந்தந்தப் பகுதிகளில் நடக்கும் முகாமுக்குச் சென்று செலுத்திக் கொள்ள வேண்டும்.

முதல் டோஸ் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கே, பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது என்று உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. எனவே, மூன்றாவது டோஸ் தடுப்பூசி அவசியம் இல்லை; அதுபோன்ற திட்டமும் இல்லை. இவ்வாறு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.



மும்பை

## ஷாருக்கானின் மகனுக்கு பிணை மறுப்பு



சொகுசுக் கப்பலில் நடந்த போதை விருந்து வழக்கில் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானுக்கு பிணை வழங்க மும்பை நீதிமன்றம் மறுத்துள்ளது.

மும்பையில் இருந்து கோவா சென்ற சொகுசு கப்பலில் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது அங்கு போதை விருந்து நடந்தது தெரியவந்தது.

இதையடுத்து அதிகாரிகள் போதைப்பொருளுடன் இருந்ததாக நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கான் (வயது 23) உட்பட 8 பேரை கைது செய்தனர். அவர்கள் தற்போது நீதிமன்ற காவலில் மும்பை ஆர்தர் ரோடு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சிறையிலுள்ள ஆர்யன் கான், அவரது நண்பர் அர்பாஸ் மெர்ச்சன்ட், மொடல் அழகி மூன்மூன் தமேச்சா ஆகியோர் பிணை கேட்டு மும்பை மெட்ரோபொலிட்டன் மாஜிஸ்திரேட் நீதிமன்றில் மனு தாக்கல் செய்து இருந்தனர்.

புதுடெல்லி

## “ராகுலுக்கு நவீனம் தெரியாது”



உத்தர பிரதேசத்தில் லகிம்பூரில் விவசாயிகள் மீது பாரதிய ஜனதா கட்சியினர் கார் ஏற்றி கொலை செய்த விவகாரம் தொடர்பாக சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, மத்திய அரசாங்கம் சர்வாதிகாரப்போக்குடன் செயற்படுவதாக குற்றம் சாட்டினார்.

ராகுல் காந்தியின் இந்தக் குற்றச்சாட்டை, பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் ஜே.பி.நட்டா குறை கூறியுள்ளார். புதுடெல்லியில் நடந்த நிகழ்ச்சியில், இது தொடர்பாக அவர் பேசும்போது, “ராகுல் காந்தி இன்று தேர்ந்தெடுத்திருக்கும் பாதை 70கள் - 80களின் பாதையாகும். இன்று உலகம் மிகவும் முன்னேறிவிட்டது. மக்களுக்கு அனைத்தும் தெரியும். எங்கு நாடகம் நடக்கிறது? எங்கு உண்மை இருக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள். உண்மையின் பக்கம் அவர்கள் இருப்பார்கள்” எனத் தெரிவித்தார்.

லகிம்பூர் வன்முறையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தை ராகுல் காந்தி சந்தித்தது பற்றி ஜே.பி.நட்டா கூறுகையில், “15 நிமிடங்கள் செலவழித்து, 2 போட்டோக்கள் எடுத்து, செய்தி நிறுவனங்களுக்கு கொடுத்தால் மட்டும் மாற்றம் ஏற்பட்டு விடாது” என்றார்.

தென்காசி

## “அரசியலுக்கு மகன் வருவதை நான் விரும்பவில்லை”



என் மகன் அரசியலுக்கு வருவதை நான் விரும்பவில்லை என்று, மக்கள் திராவிட முன்னேற்ற கழக (ம.தி.மு.க) பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ கூறியுள்ளார்.

குருவிக்குளம் ஒன்றியம், கலிங்கப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, அவரது மகன் துரை வைகோ ஆகியோர் வாக்களித்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் வைகோ கூறும்போது, “நான் 56 ஆண்டுகாலமாக அரசியலில் கஷ்டப்பட்டுள்ளேன். 28 ஆண்டுகாலம் இலட்சக்கணக்கான கிலோமீட்டர் தூரம் காரில் பயணம், ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் நடை பயணம் மேற்கொண்டுள்ளேன். நூற்றுக்கணக்கான போராட்டங்கள் நடத்தியுள்ளேன். ஐந்தரை ஆண்டுகள் சிறையில் இருந்துள்ளேன்.

எனது வாழ்க்கையையே அரசியலில் ஓரளவு அழித்துக்கொண்டேன். இது என்னோடு போகட்டும்; எனது மகனும் (துரை வையாபுரி) அரசியலுக்கு வந்து கஷ்டப்பட வேண்டாம் என்பதால், அவர் அரசியலுக்கு வருவதை நான் விரும்பவில்லை. கட்சிக்காரர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது வருகிற 20ஆம் திகதி நடைபெறும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தெரியும்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற விவசாயிகள் படுகொலை ஈவு இரக்கமற்ற கோரப் படுகொலை. தாலிபான்கள் செயல்பாடுகளைப் போல் இங்கு செய்து உள்ளனர். இதற்கு மன்னிப்பே கிடையாது. நீதிமன்றத்தைக்கூட அவர்கள் மதிக்கவில்லை” என்றார்.



தஞ்சாவூர்

குழந்தையைக் கடத்தி

## சொத்துகளைப் பெற நாடகம்

குழந்தையைக் கடத்தி, தனது மூன்றாவது கணவருக்கு இக்குழந்தையைக் காட்டி சொத்துகளைப் பெறுவதற்காகக் இக்கடத்தல் செயலைச் செய்தேன் என குழந்தையைக் கடத்திய பெண் தெரிவித்தாள்.

நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த தஞ்சாவூர் பர்மா கொலனியைச் சேர்ந்த பெண், தஞ்சாவூர் ராசா மிராசுதார் அரசாங்க மருத்துவமனையில் மகப்பேறு பிரிவில் சேர்க்கப்பட்டார். அடுத்த நாள் அவருக்கு பெண் குழந்தையொன்று பிறந்தது. தொடர்ந்து தாயும் சேயும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில் இக்குழந்தையை காலையில் ஒரு பெண் பையில் வைத்துக் கடத்திச் சென்றுள்ளார். இதுகுறித்துக் குழந்தையின் தந்தை மேற்கு பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார். உடனடியாக பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர். மேலும் மாவட்டக் பொலிஸ் கண்காணிப்பாளர் ரவளிப்ரியா உத்தரவின் பேரில் கூடுதல் பொலிஸ் கண்காணிப்பாளர் ரவீந்திரன் மேற்பார்வையில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

மருத்துவமனை வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளைக் பொலிஸார் ஆய்வு செய்தனர். தொடர் விசாரணையில் குழந்தையைக் கடத்திச் சென்ற பெண்ணைத் தனிப்படையினர் தொடர்ந்து குழந்தையை மீட்டனர்.

தஞ்சாவூர் ராசா மிராசுதார் அரசாங்க மருத்துவமனையில் கடத்தப்பட்ட பச்சிளம் குழந்தையைக் பொலிஸார் 30 மணித்தியாலயங்களில் மீட்டு, தாயிடம் ஒப்படைத்தனர்.

புதுடெல்லி

## இணை அமைச்சரின் மகன் பொலிஸில் ஆஜர்



லக்கிம்பூர் கெரி வன்முறை தொடர்பாக மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆசிஷ் மிஸ்ரா, நேற்றுமுன்தினம் (09) உத்தர பிரதேச பொலிஸார் முன்னிலையில் ஆஜரானார்.

உத்தரபிரதேச மாநிலம் லக்கிம் பூர் கெரியில் கடந்த 3 ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மீது கார் மோதிய சம்பவம், அதையடுத்து ஏற்பட்ட வன்முறையில் 4 விவசாயிகள் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்தனர்.

போராட்டம் நடத்திவிட்டு விவசாயிகள் செல்லும் போது, ஆசிஷ் மிஸ்ரா 3 வாகனங்களுடன் வந்து விவசாயிகள் மீது மோதினார் என விவசாய சங்கங்களின் கூட்டமைப்பான சம்யுக்த கிசான் மோர்ச்சா குற்றம் சாட்டியுள்ளது. ஆனால், இதனை அஜய் மிஸ்ராவும் ஆசிஷ் மிஸ்ராவும் மறுத்துள்ளனர். சம்பவம் நடந்த போது ஆசிஷ் மிஸ்ரா அங்கு இல்லை எனவும் கூறியுள்ளார்.

இதனிடையே, ஆசிஷ் மிஸ்ரா மீது திங்கட்கிழமை (04) உத்தர பிரதேச பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்தனர். அவரை விசாரணைக்கு ஆஜராகுமாறு சம்மன் அனுப்பினர். ஆனால் ஆசிஷ் மிஸ்ரா தலைமறைவானார்.

அதேவேளையில் லக்கிம்பூர் வன்முறை தொடர்பாக ஆசிஷ் மிஸ்ராவின் நெருங்கிய உதவியாளர்கள் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் லக்கிம்பூர் கெரியில் உள்ள பொலிஸ் குற்றப் பிரிவு அலுவலகத்தில் ஆசிஷ் மிஸ்ரா விசாரணைக்கு ஆஜரானார்.



யுனிலீவர் ஹொரண தொழிற்சாலையில்

## பெண் ஊழியர்கள் நியமனம்

பணியிடத்தில் பாலின சமத்துவம் தற்போது முக்கிய பங்கு வகித்து வருகின்ற நிலையில், மிக வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் தயாரிப்புகளின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள யுனிலீவர் ஸ்ரீ லங்கா, தனது ஹொரண உற்பத்தித் தொழிற்சாலையில் முதன்முறையாக பெண் ஊழியர்களை பணியில் அமர்த்தி, பன்மைத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு ஆகியவற்றை அடையும் தனது பயணத்தில் மற்றுமொரு முக்கியமான சாதனை இலக்கை எட்டியுள்ளது. புதிதாக இணைக்கப்பட்டுள்ள பெண் ஊழியர்கள் 23 பேரும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளதுடன், அவர்களில் சிலர் பல்வேறு துறைசார் நிபுணத்துவப் பட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் ஹொரண தொழிற்சாலையின் அழகுசாதனத் தயாரிப்புகளின் உற்பத்தி ஆலை மற்றும் தற்போது முற்றுமுழுதாக பெண்களால் இயக்கப்படும் பேபி கொலோன் உற்பத்தி ஆலை ஆகியவற்றின் உற்பத்தித் தொழிற்பாடுகளில் இணைந்து கொள்வார்கள்.

இலங்கையில், யுனிலீவர் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையில் 55% பெண்களாகக் காணப்படுவதுடன், அதன் ஒட்டுமொத்த பணியாளர்களில் 31% பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. உலகளவில் நிறுவனம் 50:50 என்ற விகிதத்தில் பாலின சமநிலையை அடைந்துள்ளது. 2020ஆம் ஆண்டின் முடிவில் தனது உலகளாவிய வணிகச் செயற்பாடுகளின் முகாமைத்துவ பதவிகளில் பாலின சமத்துவத்தை அடையவுள்ளதாக 2010ஆம் ஆண்டில் அது வழங்கிய உறுதிப்பாட்டின் ஓர் அங்கமாக இது காணப்படுவதுடன், குறித்த இலக்கை யுனிலீவர் நிறுவனம் ஓர் ஆண்டுக்கு முன்பதாகவே அடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பன்மைத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு ஆகியவற்றில் யுனிலீவர் நிறுவனம் காண்பிக்கின்ற அர்ப்பணிப்பு குறித்து யுனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் மனித வளத் துறை பணிப்பாளரான அனன்யா சபர்வால் கருத்து வெளியிடுகையில், “தற்போது ஆண் ஆதிக்கம் நிலவும் உற்பத்தி மற்றும் விற்பனைத் துறைகளில், எமது முன்களப் பணிகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் முயற்சிகளை நாம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றோம். ஹொரணவில் முதன்முறையாக பெண் ஊழியர்களை நாம் அறிமுகப்படுத்துவது, யுனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் பன்மைத்துவ வரலாற்றில் பெருமைமிக்க சாதனைகளில் ஒன்றாகும். கருத்தரிப்பு உதவி, வீட்டு வன்முறை உதவிக் கொள்கைகள் போன்ற சில கொள்கைகளை தொழிற்றுறையில் நாம் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ளோம் என்பதையும் இத்தருணத்தில் பணிவுடன் நினைவுபடுத்த விரும்புகிறோம். எங்களைப் பொறுத்தவரை, பன்மைத்துவம் என்பது பாலின சமநிலையைப் பற்றியது மட்டுமல்ல; அனைத்து வகையான திறமைசாலிகளுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் அரவணைக்கும் ஒரு சூழலை தோற்றுவிப்பதாகும். மக்கள் தங்களது திறமைகளை நிரூபிக்க இடமளிப்பது தனிநபர்கள், நிறுவனங்களின் வளர்ச்சி தளைத்தோங்க உதவும் என்று நான் உண்மையாக நம்புகிறேன்” என்று தெரிவித்தார்.

நிறுவனம் தனது ஹொரண தொழிற்சாலையில் முதன்முதலாக பெண் ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கும், தக்கவைப்பதற்கும் ஒரு விரிவான திட்டத்தை மேற்கொண்டிருந்தது. யுனிலீவர் நிறுவனம் இந்த முயற்சியை ஆழம் பார்ப்பதற்காக, கடந்த 3 ஆண்டுகளில் மிகவும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் கூடுதலாகக் காணப்பட்ட காலகட்டங்களில் சமயாசமய அடிப்படையில் பெண் ஊழியர்களை அறிமுகப்படுத்தியிருந்தது. ‘உங்கள் குறிக்கோளைக் கண்டறியவும்’ (*Discover Your Purpose*) என்ற செயலமர்வுகளும் இந்நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், பணியில் உள்வாங்கப்பட்டவர்கள், தமது தொழிலில் வளர்ச்சி கண்டு பரிணமிக்கவும், வாழ்வில் தளைத்தோங்கவும் இடமளித்தன. தேசிய தொழிற்சார் தகைமைகளைக் கொண்ட பெண்களை வேலைக்கு அமர்த்துவதால், பெண்களை தொடர்ந்தும் தக்கவைத்து, எதிர்காலத்தில் இன்னும் மேம்பட்ட, சிறப்பான பணிப் பொறுப்புகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர்களை வளர்ப்பதையும் நிறுவனம் இதன் மூலமாக உறுதி செய்துள்ளது.

இலங்கையில் சிறந்த பணியகங்களுள் ஒன்றாக

## டக்ளஸ் அன்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் தெரிவு

டக்ளஸ் அன்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனம் இலங்கையில் *Great Place to Work* முன்னெடுத்த சுயாதீன ஆய்வுகளின் அடிப்படையில் சிறந்த பணியகங்களுக்கு வழங்கப்படுகின்ற *Great Place to Work* என்று சான்று அங்கிகாரத்தைப் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது. *Great Place to Work* மூலமாக முன்னெடுக்கப்பட்ட அநாமதேய கணக்கெடுப்பில் அதன் ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட விரிவான மதிப்பீடுகளின் அடிப்படையில் டக்ளஸ் அன்ட் சன்ஸ் நிறுவனம் இந்தத் தனித்துவமான சிறப்பினைச் சம்பாதித்துள்ளது.

இந்த சான்று அங்கிகாரம் குறித்து டக்ளஸ் அன்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும்/ முகாமைத்துவப் பணிப்பாளருமான சரோஜ் பெரேரா கருத்து வெளியிடுகையில், “பொதுவாகவே வணிகங்களுக்கு மிகவும் சவால்மிக்க ஒரு காலகட்டத்தில், அதுவும் குறிப்பாக ஊழியர்களும் தொழில்தருநர்களும் மிகவும் சிறந்த மட்டங்களில் செயற்பட வேண்டிய ஒரு பேரழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஒரு நிலைமையில், இந்தச் சான்று அங்கிகாரத்தைப் பெற்றுள்ளமை எமக்கு மிகுந்த பெருமையளிக்கின்றது. எங்கள் ஊழியர்களே எங்கள் மிகவும் பெறுமதிமிக்க சொத்து என்று நாங்கள் நம்புவதுடன், இந்தச் சான்று அங்கிகாரமானது நாங்கள் நிச்சயமாக அனைவரும் விரும்புகின்ற ஒரு தொழில்தருநர் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இது எங்கள் ஊழியர்கள் தங்கள் திறனை முழுமையாக வெளிக்கொணர்ந்து, நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய இடமளிக்கிறது” என்று குறிப்பிட்டார்.

“டக்ளஸ் அன்ட் சன்ஸ் நிறுவனம் தன்னை மதிப்பீடு செய்யும் வாய்ப்பிற்காக ஊழியர்களின் கருத்துகளையும் அபிப்பிராயங்களையும் நாடியதை நாம் பாராட்டுகிறோம்” என்று இலங்கையில் *Great Place to Work* நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான கேஷானிகா ரத்நாயக்க தெரிவித்தார். “இந்தத் தர மதிப்பீடுகள் அதன் சொந்த ஊழியர்களின் நம்பிக்கையை சம்பாதிப்பதற்கான திறனை அளவிடுகின்றன; ஒரு சிறந்த பணியிடத்தை தோற்றுவிக்கின்றன. டக்ளஸ் அன்ட் சன்ஸ் நிறுவனத்தில் பணிபுரிவதற்கு அல்லது அந்த நிறுவனத்துடன் வணிகம் செய்யும் எவரும் உயர் செயல்திறனின் குறிகாட்டியாக கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான அளவீடுகளாக இவை காணப்படுகின்றன” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

LK Newspapers Viber Community

சீனா

# தாய்வான் விரைவில் சீனாவுடன் இணையும்

### சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் சபதம்

தாய்நாட்டை முழுமையாக ஒன்றிணைக்கும் வரலாற்றுப் பணி நிறைவேற்றப்பட வேண்டும்; நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் சபதம் செய்திருக்கிறார்.

இது தொடர்பில், சீன 'கிரேட்' மண்டபத்தில் சனிக்கிழமை (09) நடைபெற்ற நிகழ்வில், சீன ஜனாதிபதி தெரிவித்ததாவது:

"சீனா அமைதியான முறையில், தாய்வானுடன் ஒன்றிணைய விரும்புகிறது. தாய்வானின் சுதந்திரப் பிரிவினைவாதம், தாய்நாட்டுடன் மீண்டும் ஒன்றிணைப்பதற்கு மிகப்பெரிய தடையாக உள்ளது.

சீனா, தனது இறையாண்மையையும் ஒற்றுமையையும் பாதுகாக்கும்.



தாய்நாட்டை முழுமையாக ஒன்றிணைக்கும் வரலாற்று பணி நிறைவேற்றப்பட வேண்டும்; நிச்சயமாக நிறைவேற்றப்படும்" என்று தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக, சீனாவின் ஆக்கிரமிப்பு தொடர்பில் தாய்வான் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறது. "சீனா கனவு காண்கிறது. தலிபான்கள் வழியைப் பின்பற்ற நினைக்கிறது. ஆனால், நாங்கள் எங்களைப் பாதுகாத்து கொள்வோம்" என்று தாய்வான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோசப் வூ தெரிவித்திருந்தார்.

சீனாவில், 1949ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டுப் போருக்கு பின்னர், தாய்வான் உருவானது என்றாலும் தாய்வான், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என சீன அரசு கூறி வருகிறது.

"தேவைப்பட்டால், தாய்வானைக் கைப்பற்ற படை பலத்தைப் பயன்படுத்த தயங்க மாட்டோம்" என்று, சீன ஜனாதிபதி சில மாதங்களுக்கு முன்னர் கூறி இருந்தமை, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

லெபனான்

எரிபொருள் பற்றாக்குறை:

## இருளில் மூழ்கியது லெபனான்



எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, லெபனானின் முக்கிய மின் நிலையங்களில் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதால் நாடே இருளில் மூழ்கியுள்ளது. இதனால், லெபனான் மக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

'எரிபொருள் பற்றாக்குறை காரணமாக ஜஹ்ரானி மின் நிலையத்தில் உள்ள மின் ஆலை, டீர் அம்மர் ஆலை ஆகியவை வெள்ளிக்கிழமை (08) நிறுத்தப்பட்டது.

நாட்டின் முக்கிய இரண்டு மின் நிலையங்களிலும் உற்பத்தி நிறுத்தம் காரணமாக, மின் வலையமைப்பின் ஸ்திரத்தன்மை நேரடியாகப் பாதிக்கப்பட்டு முழுமையாக செயலிழந்துவிட்டது. தற்போது உடனடியாக செயற்பாடுகளை மீண்டும் தொடங்கும் சாத்தியம் இல்லை' என்று லெபனான் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யா

## ரஷ்ய விமான விபத்தில் 16 பேர் பலி




ரஷ்யாவின் டாடர்ஸ்தான் பிராந்தியத்தில் எல் - 410 டெர்போலெட் விமானம் விபத்துக்குள்ளானதில், 16 பேர் பலியாகி உள்ளதுடன், 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விமானத்தில் பாரசூட் சாகச வீரர்கள் 23 பேர் பயணித்துள்ளனர் என்று ரஷ்ய அவசரநிலை அமைச்சு தெரிவித்துள்ளதுடன், விமான விபத்து இடம்பெற்ற பின்னர், 7 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

சமீப ஆண்டுகளில் ரஷ்ய விமானப் பாதுகாப்புத் தரங்கள் மேம்பட்டுள்ள போதும் விபத்துகள், குறிப்பாக தொலைதூரப் பகுதிகளில் பழைய விமானங்கள் விபத்துக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

பழைய அன்டோனோவ் அன் -26 போக்குவரத்து விமானம் கடந்த மாதம் ரஷ்யாவின் தூர கிழக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்தனர்.

இதேபோல், அன்டோனோவ் அன் -26 இரட்டை இயந்திர விமானத்தில் பயணித்த 28 பேரும் ஜூலை மாதம் கம்சட்காவில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தனர் என்பதும் கவனிக்கத்தக்கது.



ஸ்பெயின்

## சீற்றத்துடன் குழம்பைக் கக்கும் எரிமலை

ஸ்பெயினின் லா பல்மா தீவிலுள்ள கும்ரே விஜா எரிமலை சீற்றத்துடன் லாவா குழம்பைக் கக்கி வருவதால் அப்பகுதியில் வசித்த 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சீற்றத்துடன் காணப்பட்ட எரிமலை, கடந்த மாதம் 19ஆம் திகதி வெடிக்கத் தொடங்கிய நிலையில் தற்போது தொடர்ந்து சீற்றத்துடன் லாவா குழம்பை கக்கி வருகிறது.

எரிமலையிலிருந்து வெளிப்படும் லாவா குழம்பு, மலை முகட்டிலிருந்து ஆறுபோல் வழிந்தோடி வருவதால் எரிமலையை அண்டிய 4 கிராமங்களில் உள்ள வீடுகள் உட்பட 1,000க்கும் அதிகமான கட்டடங்களும் சுற்றியுள்ள நிலங்களும் அழிந்துவிட்டன.

லாவா குழம்பு சீற்றத்துடன் வெளியேறுவதை அப்பகுதி மக்கள் அச்சம் கலந்த ஆச்சரியத்துடன் பார்த்து வருகின்றனர்.

இதேவேளை, எரிமலை சீற்றத்தால் வானில் படர்ந்த சாம்பல், சற்று குறைந்ததை அடுத்து, லா பல்மா தீவு விமான நிலையம் திறக்கப்பட்டு விமானங்கள் இயக்கப்படுவதுடன், கேனரி தீவுகளின் ஏனைய விமான நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன.

ரோம்

பணியிடங்களில் பாஸ் கட்டாயம்

## இத்தாலியில் வலுக்கும் போராட்டம்

அனைத்து பணியிடங்களிலும் சுகாதார அனுமதி அட்டை கட்டாயம் என்பதை ஏற்க முடியாது எனத் தெரிவித்து, இத்தாலியின் ரோம் நகரில் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், சில இடங்களில் பொலிஸாருடன் தள்ளுமுள்ளும் ஏற்பட்டது.

பொலிஸாரின் அறிவுறுத்தல், எச்சரிக்கையை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள், நேற்று முன்தினம் (09) பாராளுமன்றம்



நோக்கி பேரணியாகச் சென்ற நிலையில், அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அவர்கள் மீது கண்ணீர்ப்புகை குண்டு, நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேபோல் மிலான், செசினா உள்ளிட்ட பகுதிகளிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கொரோனா தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பணியிடங்களில் கொரோனா சுகாதார அனுமதி அட்டை என்ற திட்டம் அமுலில் உள்ளது.

தற்போது மருத்துவ பணியாளர்களுக்கு மட்டும் இது கட்டாயம் என உத்தரவிடப்பட்டு இருந்தது. இதற்காக, கொரோனா தடுப்பூசி சான்றிதழ், கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டதற்கான சோதனை முடிவை வழங்க வேண்டும்.



ஓமானுக்கெதிரான

# தொடரை 2-0 என கைப்பற்றிய இலங்கை

ஓமானுக்கு எதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த இலங்கை, அல் அமெரட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையை அடுத்தே 2-0 என தொடரைக் கைப்பற்றியது.


ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

ஓமான்: 159/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஆகிப் இல்யாஸ் 59 (38) ஓட்டங்கள். பந்துவீச்சு: லஹிரு குமார 2/20 [4], சாமிக கருணாரத்ன 2/239 [4], பினுர பெர்ணாண்டோ 1/9 [2], மஹீஷ் தீக்‌ஷன 1/24 [4], தசுன் ஷானக 1/24 [3])

இலங்கை: 163/5 (17.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: பானுக ராஜபக்‌ஷ ஆ.இ 35 (21), சாமிக கருணாரத்ன ஆ.இ 35 (26), அவிஷ்க பெர்ணான்டோ 33 (18), பதும் நிஸங்க 26 (29), தினேஷ் சந்திமால் 18 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் நடீம் 2/22 [3], கலீமுல்லாஹ் 1/31 [3.3], ஃபயாஸ் பட் 1/38 [4])

## உலகக் கிண்ணத்தில் தீர்ப்பு மறுபரிசீலனை



ஐக்கிய அரபு அமீரகம், ஓமானில் இம்மாதம் ஆரம்பிக்கவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின்போது, தீர்ப்பு மறுபரிசீலனைத் திட்டம் பயன்படுத்தப்படவுள்ளது.

அந்தவகையில், இனிங்ஸொன்றுக்கு ஒவ்வோர் அணியும் இரண்டு தீர்ப்பு மறுபரிசீலனைகளைக் கொண்டிருக்கவுள்ளன.

இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில் தீர்ப்பு மறுபரிசீலனை காணப்படுவது இதுவே முதற்றடவையாகும்.

இதேவேளை, அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் முடிவுகளைப் பெறுவதற்கு இரண்டு அணிகளும் குறைந்தது 10 ஓவர்களிலாவது துடுப்பெடுத்தாடியிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் ஐந்து ஓவர்களிலேயே முடிவு பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## உலகக் கிண்ணத்தில் ஷொய்ப் மலிக்

இம்மாதம் ஆரம்பிக்கவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில், அவ்வணியின் முன்னாள் தலைவர் ஷொய்ப் மலிக் இடம்பெற்றுள்ளார்.

கீழ் முதுகுப் பகுதி காயம் காரணமாக ஷொய்ப் மக்ஸூட் குழாமிலிருந்து விலகிய நிலையிலேயே, 39 வயதான மலிக் அவரைப் பிரதியிட்டுள்ளார்.

கடந்தாண்டுக்கான இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் பின்னர் பாகிஸ்தானுக்காக மலிக் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக குஷ்டில் ஷா, மொஹமட் ஹஸ்னைன், அஸாம் கானை பக்கர் ஸமன், ஹைதர் அலி, சஃப்ராஸ் அஹ்மட் ஆகியோர் பிரதியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணியில் இணையும் மலிக்

இம்மாதம் ஆரம்பிக்கும் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், வலைப்பந்துவீச்சுப் பந்துவீச்சாளர் ஒருவராக இந்திய அணியுடன் உம்ரான் மலிக் இணையவுள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக்கில் விளையாடிய மூன்று போட்டிகளிலும் தொடர்ச்சியாக மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்துக்கு அதிகமாக மலிக் பந்துவீசியிருந்தார்.

இந்நிலையில், தங்கராசு நடராஜனுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்த நிலையிலேயே, சண்றைசர்ஸ் ஹைதரபாத்தின் வலைப்பந்துவீச்சு பந்துவீச்சாளராகவிருந்த மலிக் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.



வில்டரை வென்று

## பட்டத்தைத் தக்கவைத்த பியூரி

உலகக் குத்துச்சண்டை சபையின் அதிபாரப் பட்டத்தை, பிரித்தானியாவின் டைஸன் பியூரி நேற்று (10) தக்க வைத்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவின் டெயோன்டே வில்டரை மூன்றாவது தடவையாக லாஸ் வேகாஸின் டி மொபைல் அரங்கத்தில், 11ஆவது சுற்றில் வீழ்த்தியதன் மூலமே பட்டத்தை பியூரி தக்க வைத்துள்ளார்.

ஆரம்பத்தில் வில்டர் ஆக்ரோஷமாக இருந்தபோதும், மூன்றாவது சுற்றில் வில்டரை முதலில் பியூரி வீழ்த்திருந்தார். பின்னர் நான்காவது சுற்றில் இரண்டு தடவைகள் பியூரியை வில்டர் வீழ்த்தியிருந்தார். தொடர்ந்து 10ஆவது சுற்றில் இரண்டாவது தடவையாக வில்டரை பியூரி வீழ்த்தியிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 11 ஒட்டோபர் 2021, இல. 08, ஹூணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.